ஞாயிறு வெளியீடு  ஆண்டு சந்தா ரூ. 5  தனிப்பிரதி 0—1—3  REGD. No. M. 4648

# திராவிடநாடு

மலர் 4  காஞ்சிபுரம் 7—4—1946  இதழ் 51

# பிராமணர்களை ஏன் குற்றம் சொல்லுகிறோம்?

[கைவல்யம்]

பிராமணர்களைக் குற்றம்சொல்கிறார்கள்; அப்படிச் சொல்லக்கூடாதென்று சேலம் பிராமணமாநாட்டில் சொன்னார்கள். பிராமணர்களை ஏன் குற்றம் சொல்லுகிறோம்? அவர்கள் குற்றங்களைச் சாஸ்திரங்கள், ஏற்பாடுகள், அனுபவங்கள், நடவடிக்கைகள் முதலியவைகளிலிருந்தே அநேகம் எடுத்துக் காட்டினோம்; இன்னமும் காட்டுகிறோம். பிராமணர்களும் அக்குற்றங்களைத் தெரிந்து கொள்ளட்டும். பிரிட்டிஷாருடைய உட்குணத்தில் நம்சுதந்திரங்கள்புதைந்துகிடப்பது போலவே, பிராமணர்களுடைய சாஸ்திரங்களிலும், ஏற்பாடுகளிலும் மற்றவர்களின் சுதந்திரங்கள் மறைந்து கிடக்கின்றன. பழைய ஏற்பாட்டின்படி அடங்கி நடப்பதைக் கடைப் பிடித்தோமானால் நமக்குச்சுயராஜ்யம் வராதென்று தேசியவாதிகள் சொல்வது போலவே, பிராமணர்களைக் கும்பிட்டு அவர்கள் சாஸ்திரக்கட்டளைகளுக்கு அடங்கி நடந்தால் மற்றவர்களின் சூத்திரப்பட்டம்போகாதென்றுநாம் சொல்கிறோம்.

சம்பத்தும் தரித்திரமும் ஒரு இடத்தில் சந்தித்தால் வித்தியாசம் காட்டத்தான் செய்யும். அதை நாமும் பார்க்கிறோம். அத்தகைய வித்தியாசம் கூடாதென்று தற்கால உலகம் சொல்லுகிறது. சாஸ்திர ஒழுக்கவீனன், உல்கஒழுக்கவீனன் நாடகம் நாட்டியம் சங்கீதம் முதலியவைகளைப் புகழ்ந்து கொண்டு பிழைப்பவர்களெல்லாம் பிராமணர்கள். சைவமடாதிபதிகளிலிருந்து தண்டபாணித்தேசிகர் வரையிலும் சூத்திரர்கள். இந்த இரண்டுபெயருடையவர்களும்ஒரு இடத்தில் சந்தித்து ஒருதொழிலைச் செய்தால் இறப்புப்பிறப்பில்லாக்கடவுள்கூட இறந்துவிடுமென்றுநினைப்பதுபோலவே, இறந்துபோன இராமன், கிருஷ்ணன் என்கிற கடவுள் கூட திருவையாற்றில் இனியும் இறந்துவிடும்என நினைக்கிறார்கள். தியாகராஜ பிரம்மம், பிரம்மத்தை விட்டுப் போய்விட்டால் பிராமணன் பிழைப்பில் ஒருபாகம் குறைந்துவிடுமே என்றுகவலைப்படுகிறார்கள். ஒருஜாதிக்கு மற்றொரு ஜாதி தாசிமகன், அடிமை என்று கடவுள் சொன்னதாகச் சொல்லிக் கடவுளையே ஏமாற்றும் அந்த ஜாதிக்கு இந்தக்குருட்டுக் கொள்கைகளெல்லாம்தெய்வவிரோதமென்று சொன்னால் தெரியாது. சுயஜாதிக் கர்வத்தில் மற்ற ஜாதிகளின் பகை வளரும் என்பதும் தெரிந்து கொள்ளவில்லை.

நமது நாட்டில் கல்வி, அறிவு, ஒழுக்கம் முதலியவைகளில்சிறந்து பெரியார்கள்என்று கொண்டாடப் பட்டவர்களில் யார் பிராமணர்களைக்குற்றம் சொல்லாமலிருந்தார்கள்? எல்லோரும் குற்றம் சொன்னார்கள். "பிராமணர்களே! நீங்கள் நாடெல்லாம் விஷத்தைப் பரப்பிவிட்டீர்கள்! நீங்களே அந்த விஷத்தைஎடுத்துவிடுங்கள்" என்றும் "எப்பொழுதும் நல்லநிலைக்கு வர முடியாத புரோகிதக் கூட்டத்தை வெறுத்துத் தள்ளுங்கள்" என்றும் சாமி விவேகானந்தர் சொன்னார். "இந்தியாவின் முற்கால சரித்திரத்தைஆராய்ந்துபார்த்தால்இங்கே இருண்டநிலை ஏற்பட்டதற்குக்காரணம் நாம்தனிப்பட்டு நிற்கப் பிரியம் கொண்டதே. அது எனக்குச் சொந்தம், என்னுடையது, எனக்கே உரித்தாகட்டும்என்று இப்படியே கூறிக்கொண்டு நம்அறிவுக்கதவுகளையும், ஜன்னல்களையும் மூடிக்கொண்டோம். இந்தியாவின் ஞான ஒளியைச் சொந்தமாக்கிக் கொள்ளும் பிரயத்தனத்தில் அந்தகாரத்தைஏற்படுத்திக் கொண்டோம். நமது பெருந்தலைவர்கள் செய்த தவறு என்னவென்றால் தன்னலப் பொருந்திய உரிமைகளைக்காப்பதில் அதிக கவனம்செலுத்தி நமது குழந்தைகளுக்குச்சமமான தாழ்ந்த வகுப்பாரிடம்காட்டவேண்டியதன்னலமற்ற கடமைகளை விட்டுவிட்டார்கள். சுருதிகள் பலனற்றதுபோல் நினைத்துக் கர்ம காண்டத்தையே கைக்கொண்டார்கள். விஷய விசாரணையை உள்ளபடியே செய்வதற்குப்பதிலாய் பழைய ஏட்டுக்கல்வியையே பிரதானமாகக் கசக்கினார் சங்கராச்சாரி. பிறகுவந்தவர்களும் அதன்வழியே சென்றார்கள்" என்று இராமதீர்த்தர் சொன்னார். "பிரம்மஞானமும் விரிந்த வாழ்வும் சூத்திரனுக்குக் கிடையாதென்று பிராமணன்விதிபோட்டான். பிராமணன் தனதுஸ்தானத்தைமுன்ஜாக்ரதையாகவே கெட்டிப் படுத்திக் கொண்டான். புறத்தை ஒடுக்கு முன்பு ஜனங்களின் அறிவைஒடுக்கிவிட்டான். அறிவின்வேர்களைச்சூத்திரனிடமிருந்து பறித்துவிட்டபடியால் சூத்திரன் சுதந்திரமாக எக்காரியத்தையும் செய்யச்சாத்தியப்படவில்லை. பிறகு சூத்திரனுடைய தலை பிராமணனுடைய பாதத்துளியிலே ஈடுபட்டிருப்பதைச் சாவதானமாகக் காக்கவேறு சிரமம் வேண்டியதில்லையாயிற்று; ஆனால் ஆங்கிலேய அரசாங்கத்தார் விடுதலைக்கு வழிகாட்டும் கதவுகளை முற்றிலும் அடைத்துவிடவில்லை" என்று இரவீந்திரநாத்தாகூர் சொன்னார். "பேராசைக்காரன் பார்ப்பான், பிடுங்கித்தின்பான் பார்ப்பான், நாயும்பிழைக்கும இந்தப்பிழைப்பு" என்று கவி சுப்பிரமண்யபாரதியாரும் சொன்னார். "வர்ணாச்சிரமம் இனி உதவாது, அது பிற்போக்கானது, உபயோகமற்றது" என்று பத்து நாட்களுக்குமுன் ஜவஹர்லால்நேருவும் சொல்லிவிட்டார். கடைசியாக "ஞானம்உடையவன் தான்பிராமணன்" என்று மகாத்மா காந்தியும் சொல்லிவிட்டார். "பிராமணர்களே! உங்களை எல்லாஜாதியும் பகைக்கிறது. உங்களுடைய எண்ணங்களை, ஏற்பாடுகளை விட்டு எல்லாச் சமூகத்திற்கும் நன்மை செய்யுங்கள். ஒற்றுமை ஏற்படுத்தி வாழ நீங்கள் விரும்பாத வரையில் அழிந்துபோய் விடுவீர்கள்" என்று நாற்பது வருடங்களுக்கு முன் மைலாப்பூரில் ராமச்சந்திரட்டர் சொன்னார். சேலம்பிராமணமாநாட்டுத் தலைவர் உரையானது அவைகளைவிட விசேடமானதாயிருக்கிறது.

சேலம் பிராமண மாநாட்டின் தலைவர் சர். சி. பி. அவர்கள் முன் பின் ஆராய்ச்சிசெய்து பிராமணர்களுக்குச் சொன்ன உரையானது அங்கிருந்த பிராமணர்கள் மட்டுந்தான் கேட்டார்கள். மாநாட்டிற்குப்போகாதவெளிஜில்லாவாசிகளுக்கு அவரின் அறிவுரையைப் பத்திரிகைமூலம் தெரியப் படுத்தவில்லை. வழக்கமானதந்திரங்களையே அதிலும் செலுத்தினார்கள். அக்குற்றத்தை யார் சுமப்பது என்பதைப் பத்திரிகைகள்உணரவில்லை. படித்து எல்லா அனுபவமும் தெரிந்துபெரிய அந்தஸ்திலிருக்கும் சர் சி பி. க்கு பிராமணச் சபைத்தலைமைப் பதவியைக்கொடுத்தார்கள். மற்றப்பிராமணர்களும் சேர்ந்து பெரிய பிராமணப்பட்டமும் கொடுத்தார்கள், வாழ்த்தினார்கள்; எல்லாமரியாதையும் செய்தார்கள். அவரும் பிராமண சபைக்கு வேண்டியதைச் சொல்லவும் செய்தார். அவர் சொன்ன எல்லாவற்றையும் எல்லோரும் தெரிந்து கொள்ளும்படி செய்வது பத்திரிகையின்வேலை. பத்திரிகை ஆசிரியர்களோ ஆங்கிலேய மூக்குக் கண்ணாடி போட்டுக் கொண்டிருப்பவர்கள். ஆங்கில தேசமெல்லாம் சுற்றிப்பார்த்தவர்கள். அப்படியிருந்தும் பத்திரிகாசிரியர்களின் இருட்டறையும் வஞ்சனைக்களஞ்சியமும் டில்லியில் சுயராஜ்யம் உட்கார்ந்து கொண்டிருக்கையில்கூடத் திறந்து சுத்தப் படுத்தவில்லை என்றால், சென்னைக்கு வரும் சுயராஜ்யத்தை எங்கே வைத்துப்பூட்டுவார்களோ? சேலம் மாநாட்டிற்கு முக்கியமான ஒருவரை அனுப்பித் தெரிந்துவரும்படியாகச்செய்து அதைக்குடிஅரசுப் பத்திரிகை10—3—46ல் வெளியிட்டிருக்கிறது,

திருவையாறு தியாகராச சங்கீதச்சபை மேடையில் தண்டபாணி தேசிகர் பாடினார். அதில் தமிழ்ப் பாட்டுகள் பாடிவிட்டாராம். தேசிகர் சூத்திரனாயிருந்தபடியால் பிராமண சங்கீத வித்வான்களைத் தீட்டுப்படுத்தி, மேடையை அசுத்தப் படுத்தி, சங்கீதத்தைக் குலைத்து சாரீரத்தைக் கம்மவைத்து, இராகத்தைக்குழப்பி, சஞ்சாரத்தை நிறுத்திச் சங்கீத பிராமண வித்வான்களின்பூசை, ஜெப, ஓம, எக்ய, காயத்திரி முதலிய மந்திரங்களை எல்லாம் நரகத்திற்குப் போகச்செய்து தியாகராச பிரம்மத்தை மாயைக்கு ஓட்டி, செத்துப்போன இராமன் கிருஷ்ணனைக் கூப்பிட்டுப் பின்பும் அவர்கள் செத்துப்போய்விட்டார்களாம். இவ்வளவுசக்தியும்தேசிகருக்கு இருக்கிறதென்றுசொன்னால் அதையார் நம்புவார்கள்? முன் இருந்ததும் உண்மைதான், இப்பொழுது இல்லாததும் உண்மைதான், அந்தச்சக்தி வரவேண்டியதும் உண்மைதான். எப்படிவரும்? ஈ. வே. ரா. பெரியார் சொல்வது போலத்திராவிடர்கள் ஒன்று சேர்ந்த திராவிடநாடுதிராவிடர்க்குஎன்கிற எண்ணத்தால்தான். இன்றுவராவிட்டாலும் வந்தேதீரும். சரித்திர ஆதாரங்களும் பிரத்தியட்ச தரிசனமும் அப்படியே தெரிவிக்கிறது. ஜனங்கள் ஒன்று சேர்ந்து கண்களும் கைகளும் ஒன்று கூடினால் உடனே இருதயம் ஒன்று கூடத் தக்க சமயம் வாய்த்துவிடும். அறிந்தோ அறியாமலோஉணர்ச்சிகளும், எண்ணங்களும்கலந்துகூடிவிடும்.

இராம—கிருஷ்ணர்களையேதியாகராசர் போற்றிப்பாடினார், அதையே சங்கீத வித்வான்களும் போற்றுகிறார்கள். இராமர்க்ஷத்திரியன்; பட்சி சடாயுவைத் தந்தையாக நினைத்துப் பிதுர்க்கடனைச்செய்தார். வேடன், குரங்கு, இராட்சதன் முதலியவர்களைச் சகோதரனாகப் பாவித்தார் என்று இராமாயணம் சொல்லுகிறது. கிருஷ்ணன் சூத்திர ஜாதி. அவன் சாம்புவன் என்ற தொழிலாளியிடம் மல்யுத்தம் பழகினான். இராமர் அனுமான் தோளி

(அடுத்த பக்கம் பார்க்க)

## ரஞ்சித்சிங் கோட்டத்தில்

சீக்கிய மாவீரர் மகாராஜா ரஞ்சித்சிங் கோட்டத்தில்கூடிய அகாலிதாள் எனும் சீக்கிய மகாசபை நிர்வாகக் கமிட்டிக் கூட்டம் மார்ச் 22ந் தேதி பாபுவாபாசிங் தலைமையில் கூடிற்று.

சீக்கியரின் மத கலாசார பாதுகாப்புநிமித்தம், சீக்கியர்களுக்குத்தனி நாடு தேவை என்று தீர்மானிக்கப் பட்டு, இந்தக் கோரிக்கையைப் பிரிட்டிஷ் மந்திரிக் கோஷ்டியிடம் தெரிவிக்க, மாஸ்டர் தாராசிங், சர்தார் பலதேவ்சிங், சர்தார் பசந்த்சிங் ஆகியோர் கொண்ட கமிட்டியும் அமைக்கப்பட்டது.

## பிராமணர்களை

1-ம் பக்கத் தொடர்ச்சி

லிருந்து சண்டைசெய்தார். இராமரும் கிருஷ்ணனும் குரங்கும்கரடியுமான தேகத்திலே இருந்தார்கள். அதனால் அவர்களுக்குப் பாவம் வந்ததாகக்கதையுமில்லை. நமதுபிராமண சங்கீத வித்வான்களோ பகலெல்லாம் சினிமா, நாடகம், நாட்டியத்தைப்பற்றிப்பேசிப்பணக்காரர்களிடம் கச்சேரிக்கு ஏற்பாடுசெய்து காயத்திரி மந்திரம் ஜெபிக்கும் சந்தியா காலமெல்லாம் கச்சேரிசெய்தும், சிலர் தூக்கத்திற்கும் தொண்டைக்கும் இங்கிலீஷ்சாராயத்தைக் குடித்து வாழ்க்கை நடத்துகையில், தேசிகர் உட்கார்ந்து தமிழ்ப்பாட்டுப்பாடின இடத்தில் பிராமணத் தன்மை எப்படிக் கெட்டுவிடும்? தமிழைஇழிவு படுத்துவதும் திராவிடர்களைச் சூத்திரர்களென்பதும் போக வேண்டுமானல் பெரியார் சொற்படிதிராவிடர்என்பதின் உண்மையைத் தெரிந்து கொள்ளவேண்டும்.

பலதேசங்களில் பல அபூர்வங்களைக் கண்டுபிடித் திருக்கிறார்கள். உலகமெல்லாம் தந்திக்கம்பிகள்இல்லாமலே பெட்டிகளெல்லாம் பாடுகின்றன. எந்தஜாதி பாடினாலும் பாடுகிறது, எந்தப் பாஷையும் பாடும், அதைக்கண்டு பிடித்தவர்கள் பெரியபிரம்மம், ரிஷி, மகரிஷிகள் ஆவதில்லை, ஆக்கப்படுவதுமில்லை. நமது நாட்டில்தான் ரிஷிகளும் பிரம்மங்களும் ஆக்கப்படுகிறார்கள். எனெனில் நமது நாட்டுப் படித்தவனுக்கும், உயர்ந்த ஜாதிக்காரனுக்கும் அதில்தான் உயர்வு, அதில்தான்ஜீவனம் உண்டாவதும், உண்டாக்கிக் கொடுப்பதும் இருக்கிறது. ஆலோசனையற்ற ஜனங்களிடம் அவ்வழியைச் செலுத்துவது சுலபவாகவுமிருக்கிறது. சர் சி. பி. அவர்களைப்போன்ற மேதாவிகளான பிராமணர்களின் அறிவுரையைப் படிக்கப்படிக்க மற்றப்பிராமணர்களுக்கும்புத்திவிசாலப்படும், நாங்களும் குற்றம்சொல்ல மாட்டோம்.

—●—

### பாரதிதாசன் பாராட்டுக் கூட்டம்

புரட்சிக்கவி பாரதிதாசன் தமிழருக்கு ஆற்றிவரும் சிறந்த தொண்டினைப் பாராட்டத்திருச்சி பிஷப்ஹீபர் கல்லூரி மண்டபத்தில், பேராசிரியர் இருதயசாமி அவர்கள் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அதுபோது, தோழர்கள் டி. பி. வேதாச்சலம், கே. எ. பி. விசுவநாதன், திரிலோக சீதாராம், வித்வான் நடேசனார், எப். ஜீ. நடேசய்யர், ஜெனார்த்தனம், அண்ணாத்துரை ஆகியோர் கவியின் குணாதிசயங்களையும், கவிதாசக்தியின் மேன்மையையும்விளக்கியம் பாராட்டியும்பேசினர். பாரதிதாசன் நிதிக்கு ஆவன செய்வதாக அன்பர்பலர் வாக்களித்தனர்.

• ●

### இயக்கம் வளர

நமது இயக்கம் வளர உழைக்க உறுதி கொண்டுள்ள மாணவர் பிரச்சாரக்குழு, மே மாதத்திலிருந்து தமிழ்நாடு முழுதும் சுற்றுப்பயணம் செய்யத்திட்டமிட்டிருக்கிறார்கள். கடந்த இரண்டாண்டுகளாக நடைபெற்றதுபோலவே இவ்வாண்டும், மாணவர் சுற்றுப்பயணத் திட்டத்தை வெற்றிகரமாக நடத்திவைக்க, அந்தந்த மாவட்டத் தளபதிகள் உடனிருந்து ஆவன செய்யும்படி கேட்டுக்கொள்கிறோம். இயக்கம் வளர, இத்தகைய பிரச்சார முறையே இன்றியமையாதது. எனவே இந்த வாய்ப்பை நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ளும்படி மாவட்டத்தளபதிகளைக் கேட்டுக்கொள்கிறோம். பிரச்சாரத்திட்ட விவரம் அறிய விரும்புபவர்களும், பிரச்சாரம் செய்ய விரும்புபவர்களும், திராவிட மாணவர் பிரச்சாரக் கழகம், ஈரோடு, என்ற முகவரிக்கு எழுதவும்.

# பேச்சு மேடை

—(பரதன்)—

ஒரு சிக்கலானபிரச்னை. நாம்முன்னேறி வருகிறோமா, அல்லதுபழையபடியே இருக்கிறோமா, என்று சற்று நிதானமாகஆராயத்தொடங்கினல், சிக்கல் தோன்றும்.

சர். A. இராமசாமி முதலியார், அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா, ரஷியா, சீனு, நாடுகளின் பிரதிநிதிகள், மற்றும் பல்வேறு தேசத்தலைவர்கள் கூடிய, பல நாட்டுப்பிரதிநிதிகளின் கூட்டத்திலே கலந்து பேசினர், புகழும்பெற்றார், என்ற செய்தியைப் படிக்கும் போது, "சபாஷ்! நாடு மிகமிக முன்னேறிவிட்டது. நாட்டுப்புகழ் நானிலமெல்லாம் பரவுகிறது. நமதுநாட்டு அறிஞரொருவர் அகிலத்திலேபுகழ் பெற்றவர்களில் ஒருவரானார். இனிநாம்தலைநிமிர்ந்து நடக்கலாம், நாம் எந்த நாட்டவருக்கும் இளைத்தவர்களல்ல." என்று கூறிப் பூரிக்கலாம் போலிருக்கிறது. ஆனல் அடுத்த விநாடிவேறோர் செய்தியைப் படிக்க நேரிடுகிறது.

"சர். சி. பி. இராமஸ்வாமி ஐயர் சேலத்தில் நடைபெற்ற பிராமண மகாநாட்டில் தலைமைவகித்தார்."

இந்தச் செய்தியைப் படித்ததும் நாடு, இவ்வளவு பிற்போக்கிலிருக்கிறதே, ஜாதிச்சனியன்தொலைய வேண்டும், பிறப்பால் உயர்வு தாழ்வு இருத்தலாகாது என்று பேசப்படும் இந்நாளிலே சர். சி. பி. போன்ற, உலகம் சுற்றியவர்கள், பிராமண மாநாட்டுக்குத் தலைமை வகிக்கலாமா? சர். சி. பி. என்ன மடிசஞ்சியா, சவுண்டியா, இல்லையே, சர்வதேசங்களுக்கும்போய் வந்தவராயிற்றே, ஒரு சமஸ்தானத்துக்குத் திவானாயிற்றே இவர் ஏன், சமித்து, தர்ப்பை, பஞ்சாங்கக் கட்டு இவைகளே, சகலசௌபாக்யத்துக்கும் சாதனம் என்றுகூறும் மடிசஞ்சிகளின் கூட்டத்தில் சேருகிறார்? நாடு, இவ்வளவு பிற்போக்காக இருக்கிறதே, இந்த நாட்டுக்கு எப்போது தான்விமோசனம் ஏற்படும் என்று சோகிக்க வேண்டி இருக்கிறது.

இந்த இரண்டு செய்திகளையும் ஆதாரமாகக் கொண்டு, நாடு எந்த நிலையில் இருக்கிறது என்று ஆராயத் தொடங்கினல், சிக்கலாகத்தானே இருக்கும்? மனவலி ஏற்படும்.

லெப்டினனட் கர்னல் லட்சுமி, இந்திய தேசீய இராணுவ உடையுடன் காட்சி தந்தார், என்று கூறும்போது, "பேஷ்! பெண்களே போர்க்கோலம் பூண்டு விட்டனர், இனி நாட்டின் எதிர்காலத்தைப் பற்றிக்கவலைப்படத் தேவையில்லை, நாடு மிகமிக முன்னேறிவிட்டது" என்று பெருமையாகப் பேசமுடிகிறது. ஆனல் அடுத்த செய்தி வருகிறது நமது மனதைக்குடைய.

"அலமு என்ற விதவை, அன்று பிறந்த குழந்தையைக்கொன்று விட்டுத் தானும் குளத்தில் விழுந்து இறந்தாள்"

இந்தச் செய்தியைப் படித்ததும் "ஆஹா! நாடு எவ்வளவு பிற்போக்கில் இருக்கிறது. பெண்கள் எவ்வளவு பரிதாபமானநிலையில் உள்ளனர். பெண்குலம் இப்படி இருக்கும்போது, நாடு தலைதூக்கமுடியுமா? காட்டுமிராண்டிக் காலமாகவல்லவா இருக்கிறது" என்று துக்கிக்க நேரிடுகிறது.

கர்னல் லட்சுமி! வீரச் செயல் புரிந்தமாது! அலமு தற்கொலை செய்துகொண்ட விதவை! இருமாதரையும், அவர்பற்றியசெய்திகளையும் ஒரு சேரவைத்துக் கொண்டு நாடு, எந்த நிலையை அடைந்திருக்கிறது என்று பார்த்தால், எவ்வளவு சிக்கலானபிரச்னை ஏற்பட்டு விடுகிறது!

"ஆகாகானுக்குவைரதுலாபாரம்" என்ற செய்தியையும், அனாதைப் பிணம்தெருவில்கிடந்தது என்றசெய்தியையும், டாடா கம்பெனியார்புதிய தொழிற்சாலை துவக்கினார்கள் என்ற செய்தியையும், தாமோதரத்துக்கு வேலைகிடைக்கவில்லைஎன்ற செய்தியையும்இப்படிப்பட்டசெய்திகள் பலவற்றையும்படிக்கிறோம், நாடுமுன்னேற்றமடைந்திருக்கிறதா பிற்போக்காக இருக்கிறதா என்று புரிந்து கொள்ள முடியாமல் திகைக்கிறோம். நாடக மேடையில் வரும் ராஜபார்ட் தகதகவென்னும் பொன்னுடையுடன் காட்சி தருகிறான், நாம் களிக்கிறோம், இப்படிப்பட்ட ஆடைஅல்லவா போடவேண்டும், அவன் அதிருஷ்டசாலி, என்று கூறுகிறோம் அல்லவா? பிறகு காலையிலே அவனைக் கண்டபோது, நறுக்கு மீசையும் காணோம் நாகரிக உடையும் காணோம், மேனி மினுமினுப்பும் இல்லை, மேல்ஷ்தாயிசிரிப்பும் இல்லை, செச்சே! இவ்வளவு தானா ஆசாமி என்று கூறிவிடுகிறோமல்லவா. அதுபோலவே அந்த ராஜபார்ட்டும், தன் அலங்கார ஆடையைக்கண்டு பாராட்டிப் புகழ்வது தெரியும் போது ஆனந்தப்படுவதா, அந்த ஆடையின் பளுவையும், முதலாளி தரும் தொல்லையையும் ஒரு சேரச்சுமந்துகொண்டு வாழ்க்கையை வளைத்துக் கொள்கிறோமே என்றுசோகிப்பதா, என்றதிகைப்பு அடையக்கூடும். ஆனல்ஒருசௌகரியம் அவனுக்கு, சந்தோஷமாக இருக்கும் கட்டம் இருப்பது போலவே சோகக்கட்டமும் கதையிலே இருக்கும். அந்தச் சோகக் கட்டத்தின்போது, அல்லியைக் காணோமேஎன்றகவலையுடன் அழுகிறான் அர்ஜுனன் என்று நாம்எண்ணிக்கொள்ளும் சந்தர்ப்பமாகப் பார்த்து அந்த நடிகன் தன்னை ஆட்டிவைக்கும் வறுமையை எண்ணி அழுது கொஞ்சம் துக்கத்தின் பாரத்தைக்குறைத்துக் கொள்ளலாம். நாட்டு நடவடிக்கைகளை நாம் படிக்கும்போது, நமக்கு இந்த வசதியும் கிடைப்பதில்லை. சிக்கலான பிரச்சனைதான் உண்மையில். ஒரு சம்பவத்தைப்பார்த்தால் உச்சி குளிர்கிறது, இன்னோர் சம்பவமோ மனதைக் குடைகிறது. என்னதான்நாட்டின்உண்மையான நிலைமை என்று தெரிந்துகொள்ள முடிவதில்லை.

★

அலங்காரவதி ஒருவள். ஆனல் கொஞ்சம் அசடு. (ஆனல் கொஞ்சம் அசடு என்றுகூறுவதா, ஆகவே கொஞ்சம் அசடு என்று கூறுவதா என்பதை நீங்களே தீர்மானித்துக் கொள்ளுங்கள்) அவள் ஒருமுறை பெர்னட்ஷாவிடம் சிக்கிக்கொண்டாள்.

"என்னைப் பார்த்தால், என்ன வயது இருக்குமென்று தங்களுக்குத்தோன்றுகிறது" என்று கேட்டாள்.

ஷா அவளை ஏற இறங்கப்பார்த்தார்.

"உன்பற்களைப்பார்க்கும்போது பதினெட்டு வயதுப் பாவைபோல் தெரிகிறது, கூந்தல் சுருளைக்கண்டாலோ பத்தொன்பது வயது என்று சொல்லலாம் போலிருக்கிறது, உன்போக்கைக் கவனித்தாலோ 14 வயது என்று கூறலாம்" என்று பெர்னட்ஷா சொன்னார்.

அந்தப்பைத்யக்காரி, இத்துடன் விடக்கூடாதா!

"என்னைப்புகழ்ந்தது இருக்கட்டும், என்னதான் வயது என்றுநிர்ணயித்துக்கூறும்" என்று கேட்டாள்.


பார்த்தார் ஷா, பைத்யம் தெளியும் விதமாகப்பதிலிருக்க வேண்டுமல்லவா? சுரீலென்றுதந்தார்பதில்.

"18, 19, 14, இவைகளைக்கூட்டிப்பார், 51 ஆகிறது" என்றார். அசட்டுத்தனத்துக்கு ஏற்றதைப் பெற்றுக்கொண்டு, வயோதிகத்தை மறைக்க வாலிபப்பூச்சுடன்காட்சி தந்த மாது போய்விட்டாள். நம் நாடும், ஒருவிதத்திலே அந்த அலங்காரவதிபோலவே இருக்கிறது. இங்குள்ள ஒருசம்பவம், நாடு மிக மிக முன்னேறி இருக்கிறது என்று காட்டுகிறது, வேறோர் சம்பவமோ காட்டுமிராண்டிக் காலமே மாறவில்லை என்று காட்டுகிறது, என்னதான் நாட்டின் நிலைமை, நிர்ணயமாகச்சொல்லு என்று வற்புறத்தினல், பழைய கூளங்களைப் புதிய அலங்காரக்கூடையிலேகுவித்திருப்பதுபோல நாடு இருக்கிறது என்றுதான்சொல்லலாம். பெர்னட்ஷாவாநாம், மக்கள் இந்தப் பதிலைக் கேட்டுப் பாராட்ட! கோபிக்கத்தான் செய்கிறார்கள். என்மீதுகோபம் வேண்டாமய்யா, நாடு முன்னேறிவிட்டதா, இல்லையா என்று நீங்களே சொல்லுங்கள் எனக் கேட்டால், சிக்கலான பிரச்னை என்று கூறுவதன்றி வேறோர் பதிலும் அவர்களாலும் அளிக்கமுடிவதில்லை.

★

இதிலென்ன சார்! சங்கடம், நாட்டிலே உள்ள சம்பவங்களை, முற்போக்குக்கு அறிகுறிகளானவை பிற்போக்குக்குச்சான்றுகள் என்று இரண்டாகப்பிரித்து எந்த 'அம்சம்' அதிகம்இருக்கிறதுஎன்று கணக்கிட்டு, முற்போக்குச் சக்திகள் அதிகம் என்றால் நாடு முன்னேறிவிட்டது என்று சொல்லு

(7-ம் பக்கம் பார்க்க)



உறையூர்

எஸ். எம். எஸ். ஆர். பி.

சொந்தக் கைத்தறி கலர்புடவைகள் & 3-அகலம் தோத்திகள், சரிகை அங்கவஸ்திரங்கள்.

100, 80-நெ. நூலில் தயார் செய்யப்பட்டது. உத்திரவாதமுள்ள சாயம். உறுதியான—உடை, சுத்தமான—சரிகை, உயர்தரமான—ரகங்கள், நாணயமான விலைகள்.

S. M. S. R. பாலசுந்தரம்,
கைத்தறி ஜவுளி வியாபாரம்,
34, பஞ்சவர்ணஸ்வாமிகோவில் தெரு,
உறையூர் p. o. திருச்சி.

## பேச்சு மேடை

*7-ம் பக்கத் தொடர்ச்சி*

சிகள் என்ன என்ற அறிவிப்புகள் வெளியிடப்பட்டிருந்தன. அவை என்கவனத்தை இழுத்தன.

### சென்னை பேசுகிறது, கேளுங்கள்.

'தேவிபாகவதம்' பற்றி, மாம்பலம் சன்மார்க்க சம்வர்த்தினி சபாவில், கல்லிடைக்குறிச்சி ராமகிருஷ்ண சாஸ்திரியார் பேசுகிறார்.

'கிருஷ்ணோபதேசம்' பற்றி, சுவாமி நிர்விகல்பானந்தர் பேசுகிறார்.

தசரதராம பாகவதர் 'இந்திரஜித் வதம்' பற்றிக் காலட்சேபம் செய்கிறார்.

புரசவாக்கம் வேதாந்த சங்கத்தில் 'பஞ்சாதசி' பிராகார்ணம் எனும் பொருள்பற்றி கோபால கிருஷ்ண ஐயர் பேசுகிறார்.

ஸ்ரீரங்கம் ரங்கசாமி ஐயங்கார் திருவல்லிக்கேணியில் 'சீதாகல்யாணம்' நடத்திவைக்கிறார்.

கச்சாபேஸ்வரர் அக்ரகாரத்தில் 'ஞானவாசிட்டம்' நடத்துகிறார் கோபால கிருஷ்ண ஐயர்.

'ரிக்வேதம்' விளக்கப்படுகிறது வைத்தியநாதஸ்வாமியால், எஸ்பிளனேட் அரவிந்தர் படிப்பகத்தில்.

வித்வான் அண்ணங்கராச்சாரியார், தொண்டைமண்டலப்பள்ளியில் 'மாசறுசோதிபதிகம்' பற்றி உபன்யாசிக்கிறார்.

'திருக்கச்சிநம்பிவைபவம்' பற்றி ஸ்ரீமான் ரங்கசாமி ஐயங்கார் பேசுகிறார்.

மயிலையில், 'ராமாயணம்' பிரசங்கம் செய்கிறார் சுப்பிரமணிய சாஸ்திரிகள்.

எழும்பூரில், நடேச ஐயர், 'பாகவத' உபன்யாசம் நடத்துகிறார்.

'கடோபநிஷத்'தை விளக்கிவைக்கிறார் யதுநாதாச்சாரியார்.

ராமசேதுசாஸ்திரிகள், 'மகாபாரதம்' பற்றிப் பேசுகிறார்.

வெங்கட சுப்பிரமணிய சாஸ்திரிகள் 'விவேகசூடாமணி' பற்றிப் பேசுகிறார்.

பாலசுப்பிரமணிய சாஸ்திரிகள் 'பிரணவமந்திரங்களை'ப் பற்றி உபதேசிக்கிறார்.

கிருஷ்ணசாமி பாகவதர், 'ராமபட்டாபிஷேக' காலட்சேபம் நடத்துகிறார்.

வேறோர் பக்கம் நடராஜ பாகவதர் 'சீதாகலியாணம்' நடத்திவைக்கிறார்.

கௌடியா மடத்தில் பக்தி சாஸ்திரி 'சைதன்யர்' பற்றி உபன்யாசம் செய்கிறார்.

ஆனந்தாஸ்ரமத்தில் 'பஜனை' நடக்கிறது.

பண்டிட் கன்னையா, 'வேதம்' பற்றி விளக்க உரை செய்கிறார்.

தியாகராயநகரில் காமாட்சிபுரம் சுவாமிநாத சாஸ்திரிகள் 'பாகவத கதை' நடத்துகிறார்.

'லீலாவதிசுதன்' என்ற புராண கதையை சிப் ஹாதிரி பார்த்தசாரதி பாகவதர், சிந்தாதிரிப்பேட்டையில் காலட்சேபம் செய்கிறார்.

பாலசுப்பிரமணிய ஐயர், 'துருவ சரித்திரம்' கூறுகிறார்.

அன்று ஒரு நாளில் மட்டும், சுமார் 40 நிகழ்ச்சிகள். இவைகளிலே ஆறு இசை அரங்குகள்; மூன்று நாட்டியங்கள்; இரண்டு கமிட்டிக்கூட்டங்கள்; போகமிச்சமிருப்பதிலே 24 புராண சம்பந்தமான பிரசங்கங்கள். சென்னை பேசுவது, இவ்விதமிருந்தால் பிறகு, நாடு, முன்னேறிவிட்டது என்று எப்படிக் கூறமுடியும்? மக்களைத் துடிக்கச்செய்யும் பஞ்சத்தைப் போக்குவதுபற்றிப் பேசுவார் காணோம், துருவ சரித்திரம் நடக்கிறது. உலகில் காணப்படும் விஞ்ஞான அற்புதங்களை மக்களுக்கு விளக்கும் உரை இல்லை, கடோபநிஷத், ரிக்வேதம் முதலியன விளக்கப்படுகிறது. நாடு, முன்னேற்ற மடைவதற்கா, பாகவதம், பாரதம், ராமாயணம், பிரபந்தம், பதிகம், முதலியன பற்றி, மாகாணத் தலைநகரில், மக்கள் ஒருவார முழுதும் வேலைசெய்து ஓய்ந்த நேரத்தில், பேசுவது? அறிவு பரப்பும் பேச்சு எங்கே! உலகைக் காட்டும் உரை எங்கே! பல்வேறு நாட்டு நிலைமை பற்றிய பேச்சாளியே இல்லையா? அமெரிக்கா போய்வந்த தினமணி ஆசிரியர், ஆங்கிலருக்கு ஆங்கிலம் கற்றுக்கொடுக்கக்கூடியவர் என்று அக்ரகாரம் புகழும் இந்து பத்திரிகைக் குழுவினர், ஏன் இவர்கள் எல்லாம், சென்னையைப் புராணிகர்களிடம் ஒப்படைத்துவிட்டுக்கிடக்கிறார்கள். கேட்பார் யார்? கேட்பவனைத்தான், துரோகி, நாத்தீகன், என்று தூற்றிவிடுகிறார்கள். நீங்கள் யோசியுங்கள், ஒரே நாளில் ஒரு ஊரில், இவ்வளவு புராணப் பிரச்சாரம் நடைபெறுமானால், மக்களுக்கு அனுமாரின் வாலின் அளவு தெரியக்கூடுமே தவிர அமெரிக்காவின் நிலைமையா விளங்கும், சைதன்யரின் பாசுரம் நினைவிற்கு வருமேயொழியச், சோவியத் சோபிதமா புரியும்! உலகிலே வேறுஎங்கேனும் இதுபோல, ஒரே புராண மயமாக்கப்பட்டிருக்கிறதா! எந்தக் காலத்தில் வாழ்கிறோம், என்னென்ன விதமான, புதுப்பிரச்னைகள் மக்கள் முன் தோன்றியுள்ளன, எவ்வளவு சிக்கல்கள் தீரவேண்டி இருக்கிறது; இவைகளைமறந்து, ஆனந்தாஸ்ரமத்திலே பஜனை நடத்துகிறார்களே.

சென்னை பேசுகிறது, இவ்விதம், தாளச்சத்தம், மேளச் சத்தம், சதங்கைச்சத்தம், புராணிகரின்சத்தம், இவையே எப்பக்கமும் கேட்கப்படுகிறது. இங்கே பலகல்லூரிகள், பலப்பல உயர்தரக் கலாசாலைகள், உலகம் சுற்றிய அறிவாளிகள், ஊராள்வோரை மிரட்டும் உரத்தகுரலினர், உயர்தரமான பத்திரிகைகள் உள்ளன, இருந்தும் ஒரே தினத்தில் ஒருபக்கம் சீதைக்குக்கலியாணம், வேறோர் பக்கம் ராமருக்குப் பட்டாபிஷேகம், மற்றோர்பக்கம் தேவிக்குப்பூஜை, பிறிதோர்பக்கம் அம்பிகைக்கு ஆராதனை, என்று இருக்கக் காண்கிறோமே அன்றி, பிரான்சு விடுதலை பெற்றது எவ்விதம், வானத்தில் பறக்கும்வழி எப்படி ஏற்பட்டது வரிப்பளுவின்றி மக்கள் வாழமுடியுமா? வர்க்கப்போராட்டம் தீருமா? வல்லரசுகளின் ஆதிக்க வெறி அழியுமா? என்ற பிரச்னைபற்றியார் பேசுகிறார்கள்? ராஜராஜ சோழன், ராணி மங்கம்மா, ரஞ்சித்சிங் என்று, ஏதேனும் வீரக் கோட்டத்தவர்பற்றிய பேச்சு இருக்கக்கூடாதோ; தோடர்மால், போன்ற நிர்வாகிகள், இளங்கோபோன்ற புலவர்கள், ஓவியக்காரர்கள் ஆகியோர் பற்றியபேச்சு இருக்கக்கூடாதோ, அடிமை வர்த்தகம் ஒழிந்த விதம் எப்படி, என்று கூறலாகாதோ, அந்தநாள் தமிழன் யவனத்தில் வியாபாரம் செய்தவிதம் விளக்கப்படக்கூடாதோ, பேசப் பிரச்சனைகளா இல்லை? மக்கள், தெரிந்து கொள்ளவேண்டும் என்று ஆவலுடன் உள்ள விஷயங்கள் ஆயிரமாயிரம் இருக்க, சர்வடிச் சுப்பனும் தெரிந்து கொண்டிருக்கும் ராம—கிருஷ்ண கதைகளைத்தானா, அறிவுத்தாகம் அதிகரித்துள்ள இந்த நாளிலே பேசிக்கொண்டிருக்க வேண்டும்? ஜாவாவில் இன்று என்ன நடக்கிறது என்பதைப் பொதுமக்களுக்குக் கூற வேண்டிய இந்தநாளிலே ஜனகராஜ்யத்திலே நடைபெற்ற சுயம்வரத்தைப் பற்றியா பேசிக்கொண்டிருப்பது? இப்படிப்பழமைக்குப் பலமான பிரச்சாரம், பலரகமான பிரசாரம் நடைபெற்றால், புதுமைக்குப் புகலிடம் ஏது? தோடி இராகஆலாபனையுடன் சேர்த்துத்தருவது எதனை? தாசரதியின் பெருமையை! இடையை வளைத்து, சடையைக் காட்டி, பூங்கொடி போலாடி, ஆடலழகிகள் காட்டுவது எதனை? ஐயன் ஆடிய ஆட்டத்தை. சினிமா நட்சத்திரங்கள், இசைவாணர்கள், நாட்டிய ராணிகள், பாகவதசிரோமணிகள், பிரம்மஸ்ரீகள், பிரசங்க பூஷணங்கள், ஆகியோர், பழமைக்கே பிரச்சாரம் புரிபவர்களாக உள்ளனர், உலகின் இன்றைய அறிவுக்காகப் பேசுபவர்காணோம். இந்நிலையில், மக்கள் மனதிலே பூட்டப்பட்டுள்ள தளைகள் நீக்கும் வழி எங்கிருந்து ஏற்படும்? சிக்கலானபிரச்னை அல்லவா?

★

ஞாயிறு இதழில், நான் கண்ட மற்றோர் செய்தி, கருத்த மேகத்திடையே தோன்றும் மின்னல் போன்று இருந்தது. அது நிரந்தர ஒளியாகுமா, என்ற ஆசையால் தூண்டப்பட்டே இதனை எழுதுகிறேன்.

மைலாப்பூரில், பேச்சுமேடை ஒன்று அமைத்திருக்கிறார்கள், என்ற செய்திவெளிவந்திருக்கிறது. ஆவலுடன் அதனைப்படித்தேன். தோழர்கள் சிவஞானகிராமணியார், ப. ஜீவானந்தம், N. ஜீவரத்னம், T. செங்கல்வராயன், ஆகிய தோழர்கள் அந்த விழாவில் கலந்துகொள்ளுகின்றனர் என்றுஇருக்கக்கண்டு சந்தோஷித்தேன், நாட்டுவிடுதலை பற்றித்தோழர்சிவஞானமும், பாட்டாளிகளின்விடுதலைபற்றித்தோழர் ஜீவாவும், பார்ப்பனியத்திடமிருந்து திராவிடம் விடுதலை அடைவதுபற்றி ஜீவரத்னமும், பாட்டு மொழியிலே நாட்டுப் போரைக்கூற நண்பர்செங்கல்வராயனும் ஒன்றுகூடும் பேச்சுமேடை தனிச்சிறப்புப் பெறுமல்லவா, என்று களித்தேன். பேச்சுமேடைக்கு யார் தலைவர் என்று பார்த்தேன், பயந்தேன்! நண்பர் ரா. பி. சேதுப்பிள்ளைதலைவர்என்று பொறிக்கப்பட்டிருந்தது. ஐயகோ! அவர் ஒருசடையும் திரிசடையும், வேலும் வில்லும், வாலும் காலும், கோசலைச் செல்வனும் மிதிலைச் செல்வியும் என்று, பழமையை வழங்கும் இயல்பினராயிற்றே, பேச்சுமேடைக்குஅவரை அழைத்துவந்தால், ஜீவாவின்வர்க்கப்போராட்டத்தைக்குறைத்துவிட்டு, ஜானகியின் ஜடை அழகுபற்றி யல்லவா அவர் பேசத்தொடங்குவார், என்ன செய்வது என்று ஏங்கினேன். அன்று என்ன நடந்ததோ தெரியாது. ஆனால், பேச்சுமேடைக்காரரைமட்டுமல்ல, பேசத் தெரிந்தவரனைவரையும் கேட்டுக்கொள்ளுகிறேன், இனியேனும்பழமைபேசுவதை, புராணம் பேசுவதை நிறுத்துங்கள், உலகநிகழ்ச்சியை எடுத்துக்கூறுங்கள், வீரர் வாழ்க்கையைக் கதை ரூபமாக்கிப் பேசுங்கள், விடுதலைக்கிளர்ச்சிகளைச்சொல்லுங்கள், விஞ்ஞானத்தைவிளக்குங்கள், அறிவுபரவ உங்கள் ஆற்றலை உபயோகப்படுத்துங்கள், ஐயனின் பெருமையையும்அம்மையின் அருமையையும் அனைவரும் தெரிந்துகொண்டார்கள், உலகின் நிலைமைதான் நமது மக்களுக்குத்தெரியாது. அது தெரியவிடாதபடி இன்றும் புராணிகர்களின் சத்தம், சென்னைபோன்ற இடத்திலேயே அதிகமாகிவிட்டது. இந்தச்சத்தம், நமது நாட்டைப் பிடித்தாட்டும் பழமைப் பித்தத்தை அதிகரிக்கச்செய்யும், பசிபிக்கடலை அறியமாட்டார்கள் பாற்கடலின் பெருமையை அறிந்தவர்போல் பேசுவர், எவரஸ்ட் சிகரம் எது என்றால்கூறுவார்கள், எம்பெருமானின் தூதுவன் ஏந்திச்சென்ற சஞ்சீவி பர்வதத்தின் சிறப்பைச் சொல்லுவார்கள், காஷ்மீரின்பிறப்பிடம் கூறுவார்கள், யமபுரத்திலே ஓடும் நெருப்பாற்றின் நீளம் அகலம் கூறுவார்கள், டெலிவிஷன் என்றால் என்ன என்றுகேட்டால்தெரியாது என்பார்கள்; ஆனால் ஞான திருஷ்டியால் வசிஷ்டர் விஸ்வாமித்திரரின் நிலையை அறிந்தார் என்று பேசுவார்கள், மலடோவ் எங்கே போகிறார் என்று கூறத்தெரியாது, நாரதர் பிரம்ம லோகத்திலிருந்து கிளம்பிப்பூலோகம்வந்தகதையைக் கூறுவர், ராஜதந்திரக் கலகக்காரரின்பேச்சால்சமர்மூள்வதை அறியமாட்டார்கள், நாரதர் கலகவிசேஷத்தைப்பற்றிப்பேசுவார்கள்! உலகின் நடவடிக்கைகளை மறந்து, வாழ்க்கையின் பிரச்னைகளை அலட்சியப்படுத்திவிட்டுப், பிறகு, எப்படி நாடு முன்னேற முடியும்? பேச்சுமேடையைப் புராணிகர்களிடமிருந்துகைப்பற்றி, அறிவு பரப்புவோர் அங்கு ஆட்சி செலுத்தவேண்டும்; இல்லையேல், நாட்டின் நலிவு நீங்காது. இப்போது நண்பர்கள் அமைத்துள்ள பேச்சுமேடை, இந்தத் தூய்மையான பணிபுரியுமா? சிக்கலானபிரச்னைதான், இதற்குப் பதில் கூறுவதும். ஆனாலும், நம்புவோம், நல்லறிவுக்காக நண்பர்கள் பாடுபடுவார்கள் என்று.

---

## போலீசார் சம்பள உயர்வு

சென்னை மாகாணத்திலுள்ளபோலீஸ் இலாக்கா உத்தியோகஸ்தர்களின் சம்பளத்தை 1—4—46ல் இருந்து சர்க்கார் உயர்த்தியுள்ளனர். போலீஸ் இலாக்காவில் கான்ஸ்டபிள்வேலை பார்ப்பவர்களின்சம்பளம், ரூபாய்18என்றிருந்ததை இப்போது ரூபாய்20ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. இந்தஉயர்வு, இதற்கு முன் இருந்ததைவிடச் சிறிதுகூடுதல் செய்யப்பட்டிருக்கிறதென்றமுறையில் சர்க்காரைப் பாராட்டுகிறோம். ஆனால், கான்ஸ்டபிள் வேலைபார்க்கும் நிலையிலுள்ளவர்களின் வாழ்க்கைத்தரம், இந்தச்சிறிய சம்பள உயர்வினால் பூர்த்திசெய்ய முடியாதென்றே கருதுகிறோம். பொதுவாக போலீஸ் இலாக்காவில் பணிபுரியும் கான்ஸ்டபிள்களின் சம்பளமும், எல்லா உழைப்பாளிகளின் சம்பளமும் குறைந்தது மாதம் ஒன்றுக்கு ரூபாய் 30 தாகவேனும் இருந்தாலன்றி, அவர்களுடைய வாழ்க்கையை நடத்திச்செல்ல முடியாதென்பதைக் காலநிலையை நோக்கிச்சர்க்காரும், முதலாளிகளும்கவனித்து ஆவனசெய்வார்கள் என்று நம்புகிறோம்.

## கோலார் தோழர்கள் வெற்றி

கோலார் தங்கவயல் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம், வெற்றிகரமாக முடிவுற்றது. தொழிலாளர்களின் கூலியை உயர்த்தச் சுரங்க அதிகாரிகள் இணங்கினர்.

கட்டுப்பாடாக இருந்து, நிறம்பட வேலைநிறுத்தத்தை நடத்தி வெற்றி பெற்ற, கோலார் தங்கவயல் தொழிலாளர்களை நாம் மனமாரப்பாராட்டுகிறோம்.

இனி, சுரங்கத்தில் வேலை செய்பவர்களுக்கு, தினம் 13-அணா கூலியும் சுரங்கத்துக்கு வெளியே வேலைசெய்பவர்களுக்கு 10-அணா, பெண்களுக்கு 7-அணா, சிறுவர்களுக்கு 6-அணா முதல் 8-அணாவரையில் கூலிதரப்படும், என்று சுரங்கக் கம்பெனியார் அறிவித்துள்ளனர்.

திராவிட நாடு

காஞ்சி 7—4—46 ஞாயிறு

# எதிர்காலம்

ஜனப் ஜின்னுவிடமும், அகில இந்திய முஸ்லிம் லீக் அமைப்பு முறையில் சில விஷயத்திலும், அதிர்ப்தி இருந்தபோதிலும், முஸ்லிம் லீகின் அடிப்படைக் கொள்கையையும், பாகிஸ்தான் இலட்சியத்தையும், நாம் பரிபூரணமாக ஆதரிக்கிறோம் என்று, பாஞ்சாலப் பிரதமர் திவானு தெரிவித்துவிட்டார்.

பாஞ்சாலத்தில் யூனியனிஸ்டு கட்சியை நடத்திவருபவரும், காங்கிரஸ் கட்சியினருடன் கூடிக்கொண்டு மந்திரிசபை அமைத்துக்கொண்டவரும், பாஞ்சாலத்திலே ஜனப் ஜின்னுவின் முயற்சியைக் கெடுக்கத்துணிந்தவருமான, பாஞ்சாலப் பிரதமர் திவானுவே "நான் அன்றும் பாகிஸ்தானை ஆதரித்தேன்; இன்றும் ஆதரிக்கிறேன்" என்றுகூறினுர் என்றுல், அதன் பொருள் என்ன?

"திவானுவே! முஸ்லிமாகப் பிறந்தும், ஏன், முஸ்லிம் லீகை எதிர்க்கிறீர். முஸ்லிம்லீக் கேட்கிறபாகிஸ்தான், அவசியமல்லவா? பாகிஸ்தான் பெறவேண்டியது முஸ்லிமின் கடமையல்லவா;" என்று முஸ்லிம் பொதுமக்கள் கேட்கின்றனர். பொதுமக்களிடையே, பாகிஸ்தான் இலட்சியம் ஆழப்பதிந்திருக்கிறது. அதனை எதிர்ப்பது முடியாத காரியம். எனவேதான் திவானு போன்றவர்கள், பாகிஸ்தானை ஆதரிக்கிறோம், என்று கூறவேண்டி இருக்கிறது. பாகிஸ்தானைப்பற்றி முஸ்லிம்கள் கொண்டுள்ள தீர்மானம் அசைக்க முடியாததாகிவிட்டது. எல்லைப்பிரதயர் டாக்டர் கான்சாகிபும், காங்கிரஸ் தலைமைப் பீடத்தில் உட்கார வைக்கப்பட்டிருக்கும் மௌலானு அஜாதும், பாகிஸ்தானை எதிர்க்கிறுர்கள் என்றுல் அதிலே அதிசயமோ, அர்த்தமோ இல்லை, ஏனெனில் அவ்விருவரும், பாகிஸ்தான் தரக்கூடாது என்று கூறும் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்கள். இதிலே, யோசித்துப்பார்க்கவேண்டியதெல்லாம், பாகிஸ்தான் வேண்டுமா என்று முஸ்லிம்பொதுமக்கள் விரும்புகிறுர்களா இல்லையா, என்பதுதான். விரும்புகிறுர்கள் என்பதை, லீக், இந்தத்தேர்தல்களிலே பெற்ற வெற்றிகளின் மூலம் நிரூபித்துக் காட்டிவிட்டது. இதனை மறந்து, பாகிஸ்தான் எப்படித்தர முடியும், மந்திரிசபைகள் அமைக்க லீகினுல் முடியவில்லையே என்று மழலை மொழி பேசுவது, காரியத்துக்கு உகந்ததல்ல. முஸ்லிம் லீக், ஏற்கனவே, இந்த மாகாணங்களிலெல்லாம், மந்திரிசபையை மற்றக் கட்சியாருடன் கூட்டாக அன்றி, தனியாக அமைக்க முடியாதபடி, சட்டசபை அமைப்புமுறை 1935ம் வருஷச் சட்டப்படி ஏற்பட்டுவிட்டது என்பதைவிளக்கி இருக்கிறது. எனவே செத்த பாம்பை ஆட்டி வைக்கும் வேலையை, அகண்ட இந்துஸ்தானக்காரர்கள்விட்டுவிடுவது நல்லது.

பாகிஸ்தான் கூடாது, என்று பேசுபவர்கள், எங்காவது எப்போதாவது, எந்தக் காரணத்துக்காகவேனும் ஓர் கலகம் நேரிட்டுவிட்டால், அதிலே இந்து—முஸ்லிம் கைகலப்பு நேரிட்டுவிட்டால், உடனே, "பார்த்தீர்களா பாகிஸ்தான் இலட்சணத்தை? இப்படித்தானே இருக்கும் பாகிஸ்தான் வந்துவிட்டால்" என்று கலகஉணர்ச்சி பரவும் விதத்திலே எழுதியும் பேசியும்வருகிறுர்கள். இந்தத்திருப்பணியைத் 'தினசரி' பத்திரிகை தொடர்ந்து செய்துவருகிறது. ஏனோ நாமறியோம்!

வடக்கே நடைபெறும் இந்து முஸ்லிம் கலவரத்தின்போதும், ஜனப் ஜின்னு காரசாரமாக ஏதேனும்அறிக்கைகொடுக்கிறபோதும், "இப்படிஎல்லாம் லீகர்கள் செய்கிறுர்கள். சென்னை மாகாணத்திலுள்ள முஸ்லிம்கள் இதனைக் கண்டிக்கவேண்டும், இல்லையென்றுல் இங்கே உள்ள முஸ்லிம்கள்நிலைமை கஷ்டமாகும்" என்று மிரட்டுவது, மேதாவித்தனத்தின் அறிகுறிஎன்று கருதும் ஆசிரியர்கள் இருக்கிறுர்கள். அவர்கள் தூவும் விதை, நல்ல பலன்தராது.

அலிகாரிலே, கலகம், துணிக்கடைக்காரருக்கும், அங்கு துணி வாங்கச் சென்ற மாணவருக்கும். மாணவர்கள் ஒருபக்கம், வியாபாரிகள் ஒருகட்சி, என்று பிரிந்தனர். நாசவேலை நடந்துவிட்டது. அலிகார், முஸ்லீம் பெருவாரியாக உள்ள இடம். அலிகார் சர்வகலாசாலை மாணவர்கள் முஸ்லீம்கள், வியாபாரிகள் இந்துக்கள். கலகம் நடந்ததோ, துணிவாங்கச் சென்றதில் ஏற்பட்ட தகராறுல். இதனை இந்து—முஸ்லீம் கலவரம் என்று கூறுவதே தவறு, கேடுபயப்பது. தினசரிக்கு இதுமட்டும்திருப்தி தரவில்லையே! அலிகாரில் பாகிஸ்தான்! என்று தலைப்பிட்டு அந்தச்செய்தியைப் பிரசுரித்திருக்கிறது. அந்த ஏடு, பாகிஸ்தான் ஏற்பட்டால், இப்படித்தான் கலகமயமாக இருக்கும், ஆகவே பாகிஸ்தான் தராதீர்கள், பாகிஸ்தான் ஏற்பாட்டுக்கு இணங்காதீர்கள் என்று செய்தியைப் பிரசுரிக்கும் வகையாகவே பிரச்சாரம் செய்கிறது. அலிகார் அமளிக்கும் பாகிஸ்தானுக்கும் ஏன் முடிபோடவேண்டும்? அலிகார் அமளிஇந்து—முஸ்லீம் கலகம் என்றே வைத்துக்கொள்வோம், அத்தகைய கலகம், பாகிஸ்தான் கோரிக்கை ஏற்பட்ட பிறகுதான் நடந்து வருகிறதா? ஒவ்வொரு "மொகரமும்" "ராம்லீலா பண்டிகையும்" வடநாட்டிலேநடைபெறும்போது, கலகவாடை அடித்தபடி இருப்பது யாருக்குத் தெரியாது. ஒரு வித்க்கலவரமும் இன்றி மொகரம் பண்டிகை முடிந்தது என்று, பத்திரிகைகள் எழுதுவது தெரியாதா? கலகம் பாகிஸ்தான் கேட்கப்படுவதற்குப்பன்னெடு நாட்களுக்கு முன்பிருந்தே இருந்து வருகிறது, அப்படியிருக்க, அலிகார் அமளியைப் பாகிஸ்தான் கோரிக்கையுடன் இணைத்துக்காட்டுவது, அழகா, நியாயமா, பொது சமாதானத்துக்கும், சாந்திஇலட்சியத்துக்கும் ஏற்றதா?

பாகிஸ்தானை எதிர்க்க, இப்படிப்பட்ட பலகாரணங்களைத் தேடிக்கொண்டிருப்பதுவீண்வேலை. ஜனப் ஜின்னுவுக்கு "மண்ணுசை" பிடித்துவிட்டது, என்று கூறுவது, இரும்புப்பெட்டியிலே இருபது இலட்சத்தைப் பூட்டிவைத்துக்கொண்டு, வேறு ஆள் தன் கஷ்டம் போகக் கொஞ்சம் பணம் கேட்கும்போது "ஏனப்பா இப்படிப் பணத்தாசை கொண்டு அலைகிறுய்" என்று பேசுவதற்கு ஒப்பாகும்.

காங்கிரஸ் அன்பர்களுக்குப்பிரியமானதும், புரியக்கூடியதுமான பாஷையிலேயேகூறுகிறோம், 'ஐந்து ஊர்' கேட்ட பாண்டவர்களுக்கு மண்ணுசை பிடித்துவிட்டதாகத்தான் கௌரவர்கள் கூறினர். பாண்டவஸ்தானம் தர மறுத்ததன் விளைவுதான் பாரதப்போர்!

"இன்றுபாகிஸ்தான்தரமுடியாது, உள்நாட்டு யுத்தம் வருவதானுலும் ஒருகைபார்க்க வேண்டியதுதான்; அமெரிக்காவிலேகூட அப்படிப்பட்ட உள்நாட்டுப்போர் நடந்திருக்கிறது" என்று திருவிதாங்கூர் திவான் கூறுகிறுர். திவான்ஜீக்கு, உள்நாட்டுப்போர் நேரிட்டால் கவலையோ கஷ்டமோ, கிடையாது; இலாபங்கூட 'உண்டு, பரம்பரை பரம்பரையாகவேஇந்தஇலாபத்தை அவருடைய இனம் அனுபவித்து வந்திருக்கிறது — போரின்போது, வீரர்கள் களத்திலே இரத்தத்தைச் சொரிந்துகொண்டிருக்க, திவான் சர். சி. பி. இராமஸ்வாமி ஐயரின் இனத்தவர், வெற்றிக்காக வேள்வி செய்துகொண்டு, யாக குண்டத்திலே நெய்யைக்கொட்டிக்கொண்டிருந்தனர் என்றே வரலாறு கூறுகிறது. ஆகவே, இரத்தம் சிந்த வேண்டிய அவசியமில்லாதநிலைமையில் உள்ள பரம்பரையினர், போர் வரட்டுமே! வந்தால் என்ன? என்று பேசலாம். பொதுமக்கள் அவ்விதம் கூறமுடியுமா? போர் வருமாயின் பொதுமக்களுக்கு ஆபத்தே தவிர, பூசுரக்கூட்டத்துக்கு இல்லை. ஆகவேதான் பூசுரத்தலைவர், போர் வரட்டும், கவலையில்லை என்றுகூறத் துணிந்துவிட்டார். நாடு, இத்தகைய நச்சுப்பேச்சைநம்பி, பாழாகாமல் இருக்கவேண்டும். பாகிஸ்தான் தருவது, இந்திய உபகண்டத்தின் எதிர்காலத்தை சாந்தியும் சமாதானமும் நிலவக்கூடியதாக்க உதவும்.

---

# பஞ்சம் ஒழிய

★

பயங்கரமான பஞ்சம் பரவி, வங்கத்தில் ஏற்பட்டதைவிட அதிகமான அழிவைத்திராவிடத்தில் உண்டாக்கும்என்று உள்ளம் வெகும்படியான நிலைமைவளர்ந்தது. இதனைச்சமாளிக்கத்தக்க நடவடிக்கைகளை உடனடியாக எடுத்துக்கொள்ள வேண்டும் இதிலே கட்சி பேதத்தையும் மறக்கவேண்டும் என்று நாம் பலமுறை வற்புறுத்தி வந்தோம். பொதுமக்களிடம் தொடர்பு கொண்டவர்களை அழைத்து ஆங்காங்கு உணவுக்கழகம்அமைக்கவேண்டும் என்றும் எடுத்துக்கூறினேம். தேர்தல்கள் முடிந்துவிட்டன. இனி ஏற்பட இருக்கும் காங்கிரஸ் மந்திரிசபை இந்தக் காரியத்தைக் கவனிக்கவேண்டும். வெற்றிக்களிப்புடன், கொடி ஏற்றவிழாவும் படத்திறப்புவிழாவுமே போதும் என்று இருந்து விடுமானுல் பல இலட்சம் மக்களின் உயிருக்கு வேதனையை உண்டாக்கியபழியைச் சுமந்துதீரவேண்டி வரும்.

வெளிநாடுகளுக்குச் சென்று, இங்கு ஏற்பட்டுள்ள உணவுப்பொருள் நெருக்கடியைக்கூறித் தானியவகைகள்பெறுவதற்காக அனுப்பப்பட்ட தூதுக்கோஷ்டியில், காங்கிரஸ்சேர மறுத்துவிட்டது. ஆனுல், தூதுக்கூட்டத்தினர், மகத்தான வெற்றி பெற்று இந்தியா திரும்பியுள்ளனர். இந்த வெற்றிக்கு முக்கியகாரணம், சர். A. இராமசாமிமுதலியாரின்ஆற்றலே என்பதை, அவருடைய நண்பர்கள்மட்டும் அல்லஅரசியலில்அவருடன்கருத்துவேறுபாடு கொண்டவர்களே ஒப்புக்கொண்டுள்ளனர். அமெரிக்கா, கனடா, பிரிட்டன், ஆகிய மூன்று இடங்களிலும், சர். இராமசாமி, அபாரமான திறமையுடன் வேலை செய்திருக்கிறுர். அவருடைய வெற்றியின் பயனுக, பஞ்சத்தின் பயங்கரத்தன்மை பெரும்அளவுக்குக்குறைந்து இருக்கிறதுஎன்றுதைரியமாகக்கூறலாம். ஒரு சிறந்த "ராஜதந்திரி" காட்டவேண்டிய அறிவு ஆற்றலை, சர். இராமசாமி காட்டியிருக்கிறுர். அவர் மார்பிலே பூணூல் இல்லை, ஆகவே மக்கள் அவரை அறிந்துகொள்ள முடியவில்லை. இங்கே, பாசீசப்பத்திரிகைப் பிரசாரம், மக்கள் அவரைத்தெரிந்துகொள்ள முடியாதபடி செய்துவிட்டது. ஆனுல் உலகிலே பல்வேறு நாடுகளிலே, அவருடைய திறமையைப்பாராட்டுகின்றனர்; சிலநாடுகளிலே பொறுமையுமடைகின்றனர்.

"இந்தியா" வுக்குத்தேவை 45 இலட்சம் டன் தானியவகை. இதிலே, 100-க்கு 60 வீதம், கொடுக்க, உலகஉணவுக்கழகம் ஒப்புக்கொண்டது. தானியவகையிலே பெரும்பகுதி கோதுமைதான். அரிசி, அந்த நாடுகளிலெல்லாம் அதிகம் கிடையாது.

வங்காளப்பஞ்சத்தின்போது, வெளிநாடுகளிலிருந்து உணவுப்பொருள் வரவழைக்கவழி கிடைக்காமல் போய்விட்டது; கப்பல்போக்குவரத்துக் கஷ்டமான நிலைமையில் இருந்ததால். இப்போது அந்தக்கஷ்டம் இல்லை, கப்பல் வசதி இருக்கிறது.

உள்நாட்டில், தானியக்கொள்முதல் முறையிலும், பங்கீட்டு முறையிலும், தக்கபடி திட்டமிட்டு வேலை செய்து, புஞ்சைப்பயிர், காய்கறி, வேறுவகை உணவுப்பொருள் ஆகியவைகளைச் சாகுபடி செய்யும் காரியத்தையும் செய்தால் (இப்போது சர். இராமசாமியின்வெற்றியால் கிடைக்கும் தானியவகையுடன்சேர்த்து) பஞ்சத்தின் பிடியிலிருந்து நாடு, தப்பித்துக்கொள்ளமுடியும். சர்க்காரின்திறமையைப்பொறுத்திருக்கிறதுஇந்தக்காரியம்.

அமெரிக்கா அனுப்புவதாக ஒப்புக்கொண்டுள்ள தானியவகை, அவ்வப்போது ஒழுங்காக இங்குவந்து சேருவதற்கான முறை திறம்பட இருக்க வேண்டும்.

உணவுப்பொருள் நெருக்கடி அடியோடு ஒழிந்து, "இந்தியா" பஞ்சம் என்ற பயங்கர நினைப்புமற்று வாழ,வழியும் இருக்கிறது.

இன்று உலகிலே, ரஷியா, அர்ஜென்டினு எனும் இரு நாடுகளிலே, உணவுப்பொருள்வகை ஏராளமாகஇருக்கிறது. அர்ஜென்டினு, தென் அமெரிக்காவில் உள்ள பிரதேசம். இங்கு கோதுமையை, இரயிலுக்குக் கரியாக உபயோகிக்கிறுர்களாம், அவ்வளவு அமோகமாகக் கோதுமை விளைந்திருக்கிறது. ரஷியாவிலேயும், இம்முறை மாசூல்நேர்த்தியாக இருக்குமென்று கூறப்படுகிறது.

இவ்விரண்டு நாடுகளுக்கும், நேரடியாக ஓர் தூதுக்கூட்டம் சென்று, உணவு நெருக்கடி நிலையை விளக்கிக்கூறி, தானியவகை பெறலாம். அதுபோலவே ச்யாம் நாட்டிலேயும் உணவுப்பொருள், முக்கியமாக அரிசி, பெறுவதற்காக, ஒரு திறமையான 'தூதர்' அமர்த்தப்படவேண்டும். இந்தக்காரியங்களை ஒழுங்காக நடத்தினுல், பயங்கரப்பஞ்சம், இனி நமக்கு இங்கே இடமில்லை என்று ஓடிவிடும் சர்க்கார் என்ன செய்யப்போகிறுர்கள்?

## கருப்புச் சட்டைப் படை முதலாவது மாகாண மாநாடு மதுரை

கருப்புச் சட்டைப் படை மாகாண முதலாவது மாநாட்டை மதுரையில் மேமீ 11, 12-தேதிகளில் பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் தலைமையில் நடத்த முடிவு செய்துள்ளபடியால் தங்களுடைய அன்புமிக்க ஆதரவையும் இயன்ற பொருளுதவியையும் தந்து மாநாட்டை வெற்றிகரமாக நடத்தித்தர வேண்டுகிறோம்.

வரவேற்புக் குழுவினர்

●

## பிறப்பு

திருவத்திபுரம் தோழர் இராசமாணிக்கத்தின் மனைவி பரிபூர்ணம் ஈன்றெடுத்த பெண் சேய்க்கு "கண்ணகி" எனபெயரிட்டதன்நினைவாகத் 'திராவிடநாடு' பத்திரிகை வளர்ச்சிக்கு ரூ. 2. தரப்பட்டது.

## தன்மானத் தாலாட்டு

ஆக்கியோர்:— புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் திருவத்திபுரம் மாவண்ணு தேவராசன்.

விலை 0—2—6 தனிப்பிரதி வேண்டுவோர் 0—3—3 தபால் தலை அனுப்பவும். வியாபாரிகளுக்கு தக்க கழிவு தரப்படும்.

குறிப்பு:— மாவண்ணு தேவராசன் எழுதிய இன எழுச்சிப்பாக்கள் கிடைக்கும். தனிப்பிரதி 0—3—0.

விவரங்கட்கு:— ஸ்ரீ இலட்சுமி நூல் பதிப்பகம், திருவத்திபுரம் (N. A.)

கற்பனைச் சித்திரம்:

# குமரிக் கோட்டம்

—(சென்றவாரத் தொடர்ச்சி)—

கதிரவனைக் கண்டு கமலம் களிக்கும் என்பார்கள், காமத்துக்குப் பலியான குமரியின் முகத்திலே காலைக்கதிரவன் ஒளிபட்ட போது, இரவு நேரிட்டசேஷ்டையின் அடையாளங்கள், கன்னத்தில் வடுக்களாகத்தெரிந்தனவேயன்றி, முகம் மலர்ச்சியாகத் தெரியவில்லை. கண் திறந்தாள், புதியதோர் இடமாகத் தோன்றிற்று, திகைப்புடன் பார்த்தாள், செட்டியார்மீது சாய்ந்து கொண்டிருப்பதை. ஐயோ,என்று அலறியபடி எழுந்திருக்கலானாள், செட்டியாரோ, "அன்பே!" என்று கூறி, அவளை மீண்டும் தன்மீது சாய்த்துக்கொண்டார்.

"பாதகா! பாவி! மோசம் போனேனே! என்னமோ தின்னக் கொடுத்துவிட்டு, என்னை இக்கதிக்கு ஆளாக்கினையே, நீ நாசமாகப் போக" என்று வசை மொழியை வீசியபடி, கைகளைப் பிசைந்து கொண்டு, கலங்கினாள் குமரி. செட்டியார், முகத்திலே அச்சமோ, கவலையோ தோன்றவில்லை. பரிபூரணத்திருப்திதாண்டவமாடிற்று.

"குமரி! கூச்சலிடாதே! உனக்குத்தான் தீமை அதனால். நடந்தது நடந்துவிட்டது" என்றார் அவர்.

"அடபாதகா! பதைக்காமல் துடிக்காமல் பேசுகிறாயே, ஒரு ஏழையின் வாழ்வை அழித்துவிட்டு. இதற்கா நீ பக்திமான் வேஷம் போட்டாய்? கோயில் கட்டினாய். கதியற்ற பெண்களைக் கற்பழிக்கத்தானா, கோயில் கட்ட ஆரம்பித்தாய். ஐயோ! நான் என்ன செய்வேன். நீ கொடுத்த லேகியம், என் புத்தியைக்கெடுத்து, உன் மிருகத்தனத்துக்கு என்னைப் பலியாக்கி விட்டதே" என்றுபதறினாள் குமரி.

"குமாரி! நானும் இதுவரை இப்படிப்பட்ட காரியத்தில் ஈடுபட்டவனல்ல. யாரை வேண்டுமானாலும் கேட்டுப்பார் — என்னமோ விதி வசம் இப்படி நேரிட்டுவிட்டது" என்றார் குழந்தைவேலர்.

"விதி! என்னைக் கெடுத்துவிட்டு, நிலைதவறச்செய்து என்னை இந்தக் கதிக்கு ஆளாக்கிவிட்டு, விதியின் மீதா பழிபோடுகிறாய். உன் மகளை, இப்படி ஒருவன் கெடுத்தால், நீ எப்படித்துடிப்பாய். எனக்கு இனி என்ன வழி? நீ செய்துவிட்ட அக்ரமத்தை ஆண்டவனும் கேட்கமாட்டாரா? பாவி! கோயிலிலே, இந்த அக்ரமத்தை நடத்தினையே, உனக்கு நல்ல கதிகிடைக்குமா?" என்று அழுதுகொண்டே கேட்டாள் குமரி.

"ஆண்டவன் கேட்பானேன்? இதோ, நான்கேட்கிறேன்" என்று ஒரு குரல் கேட்டு, இருவரும் திடுக்கிட்டுப் பார்க்க, அறை வாயற்படியில் கோபமே உருவெடுத்து வந்ததுபோல, சொக்கன் நின்று கொண்டிருந்தான்.

"அண்ணா! மோசம் போனேன்" என்று அலறித்துடித்துக்கொண்டு, அவன் கால்களைப்பிடித்துக்கொண்டாள் குமரி.

"சீ! நாயே! குலத்தைக்கெடுத்த கழுதே", என்று கூவி, காலை உதறினான், குமரி, ஒருபக்கம் போய் வீழ்ந்தாள்.

"நடந்தது நடந்துவிட்டது. ஏனய்யாசெட்டியாரே! அவ்வளவு தான் உனக்குச் சமாதானம்கூறத் தெரிந்தது? எவ்வளவு திமிர் இருந்தால், ஒரு கன்னிப் பெண்ணைக் கற்பழித்துவிட்டு, ஏதோ கைதவறிக் கீழே உருண்டுவிட்டதால் செம்பிலே இருந்த பால் கீழே கொட்டிவிட்டதற்குச்சமாதானம் சொல்வதுபோல, நடந்தது நடந்துவிட்டது என்று கூறத் துணிவு பிறக்கும் உனக்கு. என்னை வெளியூர் போகச்சொல்லிவிட்டு, விடிவதற்குள், இவளை விபசாரியாக்கிவிட்டாய். நடந்தது நடந்துவிட்டது. நாயே! இனிநடக்கவேண்டியதைச் சொல்" என்று செட்டியார் மீது பாய்ந்தான். அவர் அவன் காலில் விழுந்து, "அப்பா! நீ என்னை எது செய்தாலும் தகும். நான் செய்துவிட்ட அக்ரமத்துக்கு எவ்வளவு வேண்டுமானாலும்என்னைத்தண்டிக்கலாம். காமாந்தகாரத்தால் நான் இந்த அநியாயத்தைச் செய்துவிட்டேன்." என்று புலம்பினார்.

"காமாந்தகாரம்! அதை இந்த ஏழைப் பெண்ணிடம் காட்டவா, கோயில்! ஊரெல்லாம் உன்னை உத்தமன் என்று புகழ்கிறது, பாவி, நீ, என் குடும்பத்துக்குச் சனியனாக வந்தாயே. நடந்தது நடந்துவிட்டதுஎன்கிறாயே, நினைத்துப்பாரடா பாதகா, நீ செய்த காரியத்தை. ஏமாளிப்பெண்ஒருவளை,ஏழையை, கூலிவேலை செய்யவந்தவளைக் கற்பழித்திருக்கிறாய்.நீ ஆயிரம்கோயில் கட்டி என்னபிரயோஜனம்? உனக்குத் தாய், தங்கை, அக்கா, யாரும் கிடையாதா? குமரி, எவ்வளவு களங்கமற்றவள், கொடியவனே! அவளை இக்கதிக்குக் கொண்டுவந்தாயே!" என்று சொக்கன் ஆத்திரத்துடன்பேசிக்கொண்டே, செட்டியாரைத் தாக்கினான்.

"சர்வேஸ்வரா! ஐயோ அப்பா! வேண்டாமடா, சொக்கா, நான் தாளமாட்டேண்டா, உயிர்போகிறதடா, உன்காலைக் கும்பிடுகிறேனடா, நீ என்ன செய்யச் சொல்கிறாயோ அதைச்செய்கிறேண்டா, அப்பா, சொக்கா,நான்பாவிதான், என்னைக் கொல்லாதே" என்று செட்டியார்கூவினார்.

"சொல்வதைச் செய்கிறாயா? ஆனால் கேள், குமரியைப்பலரறியக்கலியாணம் செய்துகொள்" என்று கர்ஜித்தான சொக்கன்.

"கலியாணமா? ஐயோ, அடுக்காதே" என்றார் செட்டியார்.கீழே வீழ்ந்துகிடந்த குமரியின் கூந்தலைப் பிடித்து அவளைத் தூக்கி நிறுத்தி, "இது அடுக்குமா? இவளைக்கெடுத்துவிட்டு, பிறகு யார் தலையிலாவது கட்டுவது அடுக்குமா?" என்று சொக்கன் கேட்டான். குமரியின் கண்களிலே வழியும் நீரையும் கண்டார் செட்டியார், இங்கே புனல், சொக்கனின் கண்களிலே அனல், "ஆண்டவனே! நான் என்னசெய்வேன்" என்று அழுகுரலுடன் கூறிக்கொண்டேதலையில் அடித்துக் கொண்டார்.

"அக்ரமக்காரா! அடிக்கடி ஆண்டவனை ஏன் கூப்பிடுகிறாய்? அநாதைப்பெண்களை ஆலயத்திலே கற்பழிக்கும் உனக்கு ஆண்டவன் பெயரைக்கூடச் சொல்லத்தோன்றுகிறதா? இனி நடக்கவேண்டியதைச்சொல்" என்று சொக்கன் சீறினான்.

"அப்பா! என்பேச்சைக் கொஞ்சம்கேள்;நான் ஏதோ புத்தியில்லாமல் இக்காரியம்செய்துவிட்டேன். நான் குமரியைக் கைவிடுவதில்லை, கடைசிவரை காப்பாற்றுகிறேன் ......................"

"உன் கூத்தியாளாகச் சொல்கிறாயா? என் எதிரிலே என் தங்கையைவைப்பாட்டியாக்கு என்று கேட்குமளவு உனக்குத் துணிவு பிறந்ததா?"

"வேறென்ன செய்வது, சொக்கா! நான் வைசியகுலம். ஊருக்கெல்லாம் ஜாதியாச்சாரத்தைப் பற்றிப்பேசுபவன், வேறு ஜாதிப் பெண்ணைக் கலியாணம் செய்து கொண்டதற்காகச்சொந்தமகனையே வீட்டைவிட்டுத் துரத்தியவன்...... ......................................"

"அதனால்..........................?"

"எங்கள் குலத்தவர் ஆச்சாரம் கெடக்கூடாதே, உலகம் என்னைப் பழிக்குமே, குடும்பமே இழிவாக்கப்படுமே"

"என் குடும்பத்திலே நீ செய்து வைத்தகாரியத்துக்கு, ஊரார் எங்களுக்கு மகுடம் சூட்டுவார்களா? மடையா! ஒருபெண்ணின் கற்பை அழிக்கத் துணிந்துவிட்டு, குலப் பெருமை, குடும்பப் பெருமைகளைக்கூறுகிறாயே, மானமின்றி, ஈவு இரக்கமின்றி"

"நான் வைசியகுலம்,............"

"நான் உப்பிரஜாதி..............."

"உப்பிரஜாதியில் பெண் கொள்ளும் வழக்கம், வைசிய குலத்திலே கிடையாதே. பரம்பரை பரம்பரையாக வாழ்ந்த குடும்பம். எங்கள் குடும்பத்திலே ஜாதியைவிட்டு ஜாதியில் கலியாணம்செய்வதில்லையே."

"எங்கள் குலத்திலும் குடும்பத்திலும் காமப்பித்தம் பிடித்தவர்களுக்குப் பலியாவதற்காகப்பெண்களைப்பெற்றெடுக்கிறார்களா? என்ன திமிர் உனக்கு? உன்னிடம் அதிகம் பேசப்போவதில்லை. ஒருவாரத்துக்குள், முடிவு சொல்லியாக வேண்டும்; இல்லையானால், உன்னையும் இந்தக்கள்ளியையும் கொன்றுவிட்டு, நானும் சாகவேண்டியதுதான். சொக்கன் சொன்னால் சொன்னதுதான்."

சொக்கன் குமரியை இழுத்துக் கொண்டு வெளியே சென்றான்,புலிபோல. செட்டியார் கவிழ்ந்துபடுத்துக்கொண்டு கதறினார்.

* * *

இச்சம்பவம், ஜாடைமாடையாக கூலியாட்களுக்குத்தெரிந்துவிட்டது. கோபத்தால் சிவந்தகண்களுடன் சொக்கன் இருந்தது கண்டு, சகலருக்கும்பயம்பிடித்துக்கொண்டது. ஒருவார்த்தை கேலி பேசினாலும்போதும் சொக்கன் கொன்றுவிடுவான், என்று அஞ்சினர். மீறு வேலைக்கே வரவில்லை. குமரிக்கோ காய்ச்சல். செட்டியாரோ, சாவு வரவில்லையே என்று தவித்தபடி இருந்தார். ஒன்று,இரண்டு,மூன்று, என்று நாட்களை எண்ணிக்கொண்டிருந்தான் சொக்கன்.

ஐந்தாம் நாள், அதிகாலையில், சொக்கன் திடுக்கிட்டுப்போனான், குமரியைக்காணமல்; எங்கெங்கோ தேடிப்பார்த்தான்,கிடைக்கவில்லை; செட்டியாரிடம் சென்றான், "குமரி எங்கே?" என்று கேட்டான். 'தெரியாதே" என்று குளறினார். "கற்பழித்ததுமன்றிக்,கொலையும்செய்துவிட்டாயா? குமரியை எந்தக்குளத்திலே தள்ளிவிட்டாய்? சொல். உன்னைவிடமாட்டேன். பழிக்குப் பழிவாங்கியேத்தீருவேன்" என்று ஆத்திரமாகப்பேசிச், செட்டியாரின் கழுத்தைநெரிக்கலானான்சொக்கன். செட்டியார், "சிவனாணையாக எனக்கொன்றும் தெரியாதே.நான் இன்றுதான், அவளைக் கலியாணம் செய்துகொள்வது, ஜாதி பேதத்தைப்பற்றிக்கவலை இல்லை என்று தீர்மானித்தேன்" என்று கூற்க்கதறினார். செட்டியாரை விட்டுவிட்டு, சொக்கன் ஓடினான் வெளியே,உலகிலே எந்தக்கோடியிலிருந்தாலும் குமரியைக்கண்டு பிடித்துவிடுவது என்ற உறுதியுடன்.

* * *

சொக்கனுடைய சுபாவம்நன்கு தெரியும் குமரிக்கு. ஆகவே, எங்காவது ஓடிவிடவேண்டும்;அப்போது தான் செட்டியார் தப்புவார்என்று எண்ணிய குமரி, இரவு நடுநிசிக்குப்பிறகு, சொக்கனுக்குத் தெரியாமல் வீட்டைவிட்டு ஓடிவிட்

(அடுத்த பக்கம் பார்க்க)

## தமிழர் நிதி

வாழ்க்கைப் பாலையிலே ஈரம் சுரக்கும் இனிய நீர் ஊற்றுப் போன்றவனே இணையற்ற கவி. சவ உறக்கத்தில் ஆழ்ந்து செயலற்றுக் கிடக்கும் மக்களைத் தன் மந்திரச் சொல்லால் தட்டியெழுப்பும் மாயக்காரன் கவி. காலத்தின் தேவை கவிஞனைத் தோற்றுவிக்கிறது. பாரதிக்குப் பின்னர் அத்தகைய கவி பாரதிதாசன். இருவரும் காலத்தை வெல்லும் கவிஞர்.

தமிழ் மக்களின் வாழ்வு தழைப்பதே பாரதிதாசன்லட்சியம். தமிழ் மொழியின் உயிர்க் குரலே அவர் உள்ளத்து வீணையில் ஒலிக்கிறது. பாரதி தமிழுக்கும் தமிழர் வாழ்விக்கும் விட்டுச்சென்ற சேமநிதி பாரதிதாசன். சேமநிதியைச்சேர்த்துப் போற்றி வளர்த்துப் பயன் பெறும் உரிமை தமிழர் சமுதாயத்தின் பொதுவுடைமை. அரசியல் சாதி சமய வேறுபாடுகள் அதற்குத் தடையில்லை.

திருச்சியில் சென்ற 27-3-46ல் கக்ஷி பேதங்கள் மறந்து மக்கள் ஒன்றுபட்டு திரண்ட காக்ஷி கருதவும் இனிக்கிறது. கவியரசர் பாரதிதாசனுக்கு நிதியளிப்பது சம்பந்தமான சர்வகட்சிக் கூட்டம் அது.

தமிழ் நிதியாகிய பாரதிதாசனுக்குத் தங்கள் நன்றியைத் தெரிவிக்க ஒரு சந்தர்ப்பம் வந்திருக்கிறது. தாராளமாக நிதியளித்துத் தமிழர் மகிழவேண்டும். திரு. சி. என். அண்ணாதுரை, ஆசிரியர் திராவிட நாடு காஞ்சிபுரம் என்ற முகவரிக்கு நிதி அனுப்பினால் கவிஞருக்குப் போய்ச்சேரும்.

(சிவாஜி, 31—3—46)


மூல வியாதிகளுக்கு யௌவன பிராஷ்

கருணைக்கிழங்கு லேகியம்! ஆப்ரேஷன் பயன்தராது

மூல முளைகள், ரத்தம், சீழ்வடிதல்,குத்து,வலி, மலபந்தம்,வாய்வு பவுத்திரக் கட்டிகள், 3-வேளை மருந்தில் உபத்திரவங்கள் தணிந்து சுகம் காணலாம். இதுபோல்எந்த மருந்திலும் சுகம் காணமுடியாது.

12 நாள்யௌவன பிராஷ் ரூ. 3 சரஸ்வதிவைத்தியசாலை பழனி, S. I.

ஸ்டாக்கிஸ்ட்ஸ்:—

T. N. சொகலிங்கம்பிள்ளை மருந்து ஷாப் மதுரை.
தி. மெடிகல் & ஜெனரல் ஸ்டோர்எஜன்ஸி பொள்ளாச்சி.
R. S. வாசன் & Co கெமிஸ்ட் திருப்பூர்.
சரஸ்வதி மெடிக்கல் ஸ்டோர், நாமக்கல்.

# ராஜம் விலாஸ்

கைத்தறி ஜவுளிகள் -:- கலர் புடவைகள்

உயர்தர ரகங்கள்! உத்தரவாத ஜரிகை!!

80, 100 நெ. நூல்களால் தயாரிக்கப்பட்டவை!

ஒருமுறை விஜயம் செய்யுங்கள்

ராஜம் விலாஸ்,

சின்ன ஸௌராஷ்டிரா தெரு, உறையூர் P.O. திருச்சி.


## குமரிக் கோட்டம்

5-ம் பக்கத் தொடர்ச்சி

டாள். செட்டியார் தன்னைக்கலியாணம் செய்துகொள்வதென்பது முடியாத காரியம் என்பது அவள் எண்ணம். பொழுது விடிவதற்குள், இரண்டோர் கிராமங்களைத் தாண்டி விட்டாள். பாதையிலே நடந்தால் யாராவது தெரிந்தவர்கள் பார்த்துவிடுவார்கள் என்று பயந்து, வயலோரம், ஒத்தை அடிப்பாதை, கொடிவழி இவைகளாகப் பார்த்து நடந்து, மறுதினம் இரவு ஒரு பெரியகிராமம் போய்ச்சேர்ந்தாள். பசியால் களைத்துக் கீழே வீழ்ந்தாள். அந்தப்பரிதாபக் காட்சியைக் கண்ட கிராமத்தானொருவன், அவளுக்குக் கஞ்சிகொடுத்து, யார், என்ன, என்று விசாரித்தான். "ஓடி வந்துவிட்டேன்—குடும்பச்சண்டை" என்றாள்குமரி. "தாலி இல்லையே" என்று அவன் கேட்டான். "கட்டவில்லை" என்று குமரி கூறிவிட்டு அழுதாள்.

"அழாதே பெண்ணே, இந்தப் புத்தி முதலிலேயே இருக்கவேண்டும், போனது போகட்டும், என் வீட்டுக்குவா, அங்கே ஊருக்கு உபகாரம் செய்யும் உத்தமர் ஒருவர் வந்திருக்கிறார். அவரிடம் நியாயம் கேட்போம்வா" என்று ஆறுதல் கூறிக்குமரியை அவன் அழைத்துச் சென்றான். குமரிக்கு அவன் பேச்சும்ஒருவிதமான லேகியமோ, என்று பயமாகத்தான் இருந்தது. அவன் குறிப்பாக அதைஉணர்ந்து "நான் உன்தகப்பன்போல. பயப்படாமல் வா" என் றுதைரியம்கூறி வீட்டுக்கு அழைந்துச் சென்றான். அவன் வீட்டுத் திண்ணையிலும், மேடையிலும், கிராமத்து மக்கள் ஐம்பது அறுபது பேருக்குக் கூடியிருந்தார்கள். அவர்களிடம் அன்புடன் பழனி பேசிக்கொண்டிருந்தான்.

"ஐயாவுக்குத்தானே சொல்வது. உலகத்திலே நடக்கிற அநீதிகளை எல்லாம் சொல்லிவர்ரிங்களே. இதோ இந்தக் கொழந்தைசொல்ற அன்யாயத்தைக் கேளுங்க. கேட்டுவிட்டு ஒருவழிசொல்லுங்க" என்று கிராமத்தான் பழனியிடம் கூறினான். பலபேர் எதிரிலேதன் கதையைக்கூற, அவள் கூச்சமடைவது தெரிந்த பழனி, கூட்டத்தைக் கலைந்து போகச்சொல்லிவிட்டு, குமரியின் 'சேதி' யைக்கேட்டுத்தெரிந்துகொண்டு' திகைப்படைந்தான்.

'அம்மா, நீஎனக்குச்சிற்றன்னை' என்று பழனி சொல்லக்கேட்டு, மெய்சிலிர்த்தது குமரிக்கு. 'வேடிக்கைஅல்ல, அவர்என்தகப்பனார்தான்' என்றான் பழனி. "நீங்கதானே யாரோ பெண்ணுடன் ........" என்றுகேட்டாள்குமரி. "ஓடிவிட்டேன். என்மனைவி சேரிப்புறம் போயிருக்கிறாள், வந்துவிடுவாள். நீ கவலைப்படாதே. நான் உன்பொருட்டு என் தகப்பனாரிடம் சென்று வாதாடத்தீர்மானித்து விட்டேன். 'காதல்' என்பது மகாபாதகம் ஜாதிக்கட்டுப்பாடே பெரிது என்று சொல்லிவந்தவர், தனக்கே ஒரு காலத்தில் 'காதல்' ஏற்படக்கூடும் என்று எண்ணியிருக்க மாட்டார். இதமாகச் சொன்னால், எல்லாம் நன்மையாகவே முடியும். நீசோகிக்காதே, தைரியமாக இரு" என்று கூறினாள்.

* * *

மறுதினம், பழனி, தன்மனைவி நாகவல்லியுடன் குமரியையும், கிராமப்பெரியவர்கள் பத்துப்பேரையும் அழைத்துக் கொண்டு, மறையூர் சென்று, தந்தையைச் சந்தித்தான். வெட்கம், துக்கம், பயம், என்னும் பலவித உணர்ச்சிகளால் தாக்கப்பட்ட குழந்தைவேல் செட்டியாரால் பழனியிடம் பேசவும் முடியவில்லை.

"பழனி! எனக்கு,என்னசொல்வதென்றே புரியவில்லை. உன்னைநான் கொடுமைப்படுத்தினேன், குமரியைக் கெடுத்தேன், நான் எவ்வளவு தண்டனைக்கும் தயாராக வேண்டியவன். அவ்வளவுதான்பேச முடியும் என்னால்" என்றார். பழனி, தகப்பனாரைச் சமாதனப்படுத்திவிட்டு, சொக்கனைக்கண்டு பிடித்து வருமாறு சிலரை அனுப்பிவிட்டு, தந்தையின் கலியாணத்துக்கானஏற்பாடுகளைத் துவக்கினான். ஜாதியைப் பற்றிய பேச்சையே, செட்டியார் எடுக்கவில்லை. குமரிக்கு, ஏதோ ஒரு கன வுலகில் இருப்பதுபோலத் தோன்றிற்று.

* * *

மறையூர், வைதிகர்கள் பதைபதைத்தனர். வைசியகுல திலகர், பக்திமான், செட்டியார், உப்பிர ஜாதிப் பெண்ணைக் கலியாணம் செய்து கொள்வதா? அடுக்குமா இந்த அனாச்சாரம். அது,நமதுதிவ்ய க்ஷேத்திரத்தில் நடப்பதா.? என்று கூக்குரலிட்டனர். செட்டியாரைச் சபித்தனர். ஊரிலே, இந்தக்கலியாணம் நடைபெற்றால், பெரியகலகம் நடக்கும் என்று கூவினர். பழனி, மறையூரிலும் சுற்றுப்பக்கத்திலும் சென்று ஜாதிகுலம் என்பதெல்லாம், வீணர்களின் கட்டுக்கதை என்பதை விளக்கிப்பேசினான், கலகம் கல்லடி இவைகளைப் பொருட்படுத்தாமல். ஆகாரபூர்வமான அவனுடைய பிரசங்கத்தைக் கேட்டு, பெரும்பாலான மக்கள்,அவனுக்கு ஆதரவுதர முன்வந்தனர். வைதிகர்கள் பயந்துபோயினர், ஜனசக்தி, பழனிபக்கம் குவிவதுகண்டு. "இது போன்ற இனிமையான அறிவுக்கு விருந்தான பிரசங்கத்தை நான்இதுவரை கேட்டதே இல்லை. உன்னை மகனைப்பெற்ற நான் உண்மையிலேயே பாக்கியசாலி" என்றுகூறிப் பூரித்தார், குழந்தைவேல் செட்டியார். தாழையூர் சத்சங்கத்தின் தூதர் ஒருவர், மறையூர் வந்து சேர்ந்து செட்டியாரைச் சந்தித்து, அவருடைய செயலைத்தடுக்கமுயற்சித்தார். செட்டியாரோ, பழனி பிரசங்கத்திலே கூறின வாதங்களை வீசி, அந்த வைதிகரை விரட்டினார். வெகுண்டவைதிகர்கள், கோயிலை இடிப்போம்என்றுஆர்ப்பரித்தனர். கூலிமக்களும், தாழ்த்தப்பட்டவர்களும், கலப்புமணம்செய்துகொள்ளச்சம்மதித்த செட்டியாருக்குப் பட்டாளமானது கண்டு, கோபம் கொண்டு, ஓர் இரவு, அவர்கள் வசித்த குடிசைகளுக்குத் தீயிட்டனர். குய்யோ முறையோ என்று கூவி மக்கள் ஓடிவந்தனர். எங்கும் தீ! பசு, கன்று, வெந்தன. பாண்டம் பழஞ்சாமான் தீய்ந்தன. பழனியும் அவன் நண்பர்களும்,தீவிபத்தில் சிக்கியவர்களைக் காப்பாற்றி, வீடுவாசல் இழந்தவர்களனைவரையும், அரைகுறையாகஇருந்த கோயிலுக்கு அழைத்துச்சென்று, இனி அங்கேயே இருக்கலாம் என்று கூறினர்.

* * *

கலியாணம் சிறப்பாக நடைபெற்றது. சொக்கன் சந்தோஷத்தால் மெய்மறந்தான். குமரிக்கு, நடப்பது உண்மையா? கனவா, என்று அடிக்கடி சந்தேகமே வந்தது. மறையூர் வைதிகர்கள் அன்று "துக்க தினம்" கொண்டாடினர்.

* * *

நாகவல்லி, குமரிக்கு ஆசிரியையானாள். குமரியின் மனம், மொட்டுமலர்வதுபோலாகிவிட்டது. கோயில் வேலை நின்று இருந்தது. என்னசெய்வது இனி? என்று பழனியைச் செட்டியார்யோசனை கேட்டார். "என்ன இருக்கிறதுசெய்ய?" என்று பழனி கேட்டான். "ஆலயத்திருப்பணி அரைகுறையாகவே இருக்கிறதே" என்று செட்டியார் சொன்னார். கட்டடம் அரைகுறையாகஇருக்கிறது, ஆனால் ஆண்டவன் இங்கே கோயில்கொண்டுவிட்டார். ஏழைகளின் இல்லமாக இந்த இடம் ஆக்கப்பட்டபோதே.இங்குஇறைவன், அபிஷேகமின்றி ஆராதனையின்றி, வேதபாராயணமின்றி, தானாக, சந்தோஷத்துடன் வந்துவிட்டார்" என்றான் பழனி. மகனைக் கட்டி அணைத்துக் கொண்டு, 'உன் அறிவே அறிவு! இப்படிப்பட்ட உத்தமனை நான், ஊரிலே உலவும் சிலவைதீக உலுத்தர் பேச்சைக் கேட்டுக்கொண்டு, இம்சித்தேன். நற்குணம் படைத்த நாகவல்லியைத் துன்புறச் செய்தேன்." என்று உருக்கமாகச் செட்டியார் பேசினார்.

"அப்பா! தாங்கள் தீர்மானித்தபடி சொத்து முழுவதும் கோயில் காரியத்துக்கேசெலவிடப்படவேண்டியதுதான். ஆலயம் கட்டும் வேலையும் தொடர்ந்து நடத்தவேண்டியதுதான்......" என்று பழனி கூறிக்கொண்டே இருக்கையில், குழந்தைவேலர் குறுக்கிட்டு, "நம் சொத்தைப் பாழாக்கிக் கோயில்கட்டி, குலம் ஜாதி பேசி சமுகத்தைக் குலைத்துவரும் வைதிகர்களிடம் கொடுப்பதா?" என்று கோபத்துடன் கேட்டார். குழந்தைவேலர், சுயமரியாதை இயக்க வக்கீலானது கண்டு, பழனி களித்தான்.

"ஆலயம் கட்டவேண்டியதுதான் அப்பா, ஆனால் அதன் அமைப்பிலே சில மாறுதல்கள் செய்துவிடவேண்டும். ஆயிரம் கால் மண்டபத்துக்கு ஆரம்ப ஏற்பாடாகிவிட்டது, அது கட்டி முடிக்க இன்னும் கொஞ்சம் வேலைதான் பாக்கி, முடிந்தபிறகு, அதனை வௌவால் வாழுமிடமாக்கிவிடாமல், சிறுவர்களுக்கு அதனைப்பள்ளிக்கூடமாக்கிவிடலாம். நாகா, வேறு பள்ளிக்கூடம் தேடவேண்டியதில்லை. பிரகாரம், சிறுசிறு விடுதிகளாகட்டும், பாட்டாளிமக்கள் குடிஇருக்க. குளம் இங்கே வாழும் மக்கள் குளிக்குமிடமாகும். இங்கு அபிஷேகமும் உற்சவமும்நடப்பதற்குப்பதில், அன்பும், அறிவும் பரப்பும் பிரச்சாரஸ்தாபனம்அமைப்போம். அப்பா! தாங்கள் குமாரக் கோட்டம் கட்ட ஆரம்பித்தீர்கள், அதுகுமரிக்கோட்டமாக மாறிவிட்டது. ஜாதிபேதம்ஒழிந்தஇடமாக,காதல் வாழ்க்கைக்கூடமாக, மாறுகிறது. இது தான்,இனி,இந்தமாவட்டசுயமரியாதைச் சங்கக்கட்டடம்,நமது'பிரச்சா இலாக்கா' என்றான்.

"பேஷ்!பழனி! அற்புதமானயோசனை. ஆலயம் அமைத்து அதிலே, வைதிகர்கள் ஊர் சொத்தை விரயம்செய்வதற்கு வழி செய்யும் வழக்கத்தை நாம் ஒழித்து விடுவோம், முதலில். இது அறிவாலயமாக, அன்பு ஆலயமாக மாறிவிட்டது" என்று செட்டியார் சந்தோஷத்துடன்கூறினார்.

"குமாரக்கோட்டம் அமைத்தால், இங்கு கொட்டுமுழக்கும், குருக்களின் தர்பாரும், இருந்திருக்குமேயொழிய பலன் ஏதும் இராது. குமரியின் அன்புக்குக் கட்டுப்பட்டு, ஜாதியைகுலத்தைத்தள்ளிவிட்ட தாங்கள், இப்போது, குமரிக் கோட்டம் அமைத்துவிட்டீர். நமது குலத்தவர் இதுவரை எத்தனையோ கோட்டங்கள் அமைத்தனர், ஒருவரேனும், இதுபோன்ற குமரிக்கோட்டம் கட்டினதில்லை. அந்தப்பெருமை தங்களுக்கே கிடைத்தது" என்றான் பழனி.

"பழனி! என் கண்களைத் திறந்தவன் நீ." என்று கனிவுடன் கூறினார் செட்டியார்.

வேறோர் புறத்திலே, நாகவல்லி,குமரியின் கன்னத்தைக் கிள்ளிக்கொண்டே "பலே பேர்வழி நீ குமரி. உன்பெயரால் கோயிலே கட்டுகிறார்கள் பாரடி" என்று கேலி செய்துகொண்டிருந்தாள்.

"அவர்கள் சொல்வது தவறு அம்மா! இதற்குப் பெயர் பழனி ஆண்டவர் கோயில்என்று இருக்கவேண்டும்" என்று சாமர்த்தியமாகப் பதிலுரைத்தாள் குமரி.

"அப்படிப்பார்க்கப் போனால், அது கூடப் பொருந்தாது. 'லேகியமண்டபம்' என்றபெயர்தான்ரொம்பப் பொருத்தம்" என்று கூறிவிட்டு, ஓடினாள் நாகவல்லி. அவளைத் துரத்திக்கொண்டு குமரி ஓடினாள். தந்தையும் மகனும், அந்தக்காட்சியைக் கண்டு, ஒருவரைஒருவர்பார்த்துப் புன்னகை புரிந்தனர்!

★

## "தமிழர் நாடு"

தமிழ்நாடு, மொழி,மக்கள்,வணிகம், கைத்தொழில்ஆகியவைகளின் நலனைக்கருதித் தமிழ்நாட்டுப் பிரிவினையை அடிப்படையாகக்கொண்டு "தமிழர்நாடு" என்ற பெயரால், தமிழ் வாரப்பத்திரிகை ஒன்று டெம்மிபாதிஅளவில் 8-பக்கங்கள் கொண்டதாக தோழர் கி. ஆ. பெ. விசுவநாதன் அவர்களை ஆசிரியராகக்கொண்டுதிருச்சியிலிருந்து விரைவில் வெளிவரும் எனத்தெரிய வருகிறது.

## மலாய்முஸ்லீம்கள் பாகிஸ்தானுக்கு ஆதரவு

பினாங்கு, முஸ்லீம்வியாபாரச்சங்கத்தலைவர், மலாய்வாழ் முஸ்லீம்கள், அகிலஇந்திய முஸ்லீம் லீகின் திட்டமான பாகிஸ்தானை ஆதரிப்பதாகவும், ஜனாப் ஜின்னாவையே தங்கள் தலைவராகக் கொண்டிருப்பதாகவும் ஜனாப் ஜின்னாவுக்குத் தந்தி அனுப்பியிருக்கிறார்கள்.




# கிளி மார்க் பட்டணம் பொடி.

நிறம் காரம் மணத்தில் நிகரற்றது
இன்றே உங்கள் தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள்.

எ.எஸ்.ராஜன் அண்டு கம்பெனி,
தபால்பெட்டி நெ. 1155.
பழையவண்ணாரப்பேட்டை,சென்னை.

# ★ பாரதிதாசன் நிதி ★

புரட்சிக் கவிஞர் பாரதிதாசனுக்காக நிதி திரட்டும் பணியை முன்னின்று நடத்திவந்த நாமக்கல் தோழர் கிருஷ்ணராஜு அவர்கள், இதுவரை, சுமார் 1750–0–0 நிதிக்காகச் சேர்த்துள்ளார். இஃதன்றி ஆங்காகே, அவர் அனுப்பிய ரசீது புத்தகங்கள்மூலம்தொகைகள் வசூலாகி உள்ளன. கையொப்பமிட்டவர்களிலேசிலர் பணம் இன்னமும் அனுப்பித்தரவில்லை.


இப்போது ஷை நிதிக் கமிட்டி எல்லாக் கட்சியினரும் கொண்டதாக விரிவாக்கப் பட்டிருக்கிறது. நிதிக்கமிட்டிக் காரியாலயப் பணியாற்ற நான்மகிழ்ச்சியுடன் ஒப்புக்கொண்டேன். இதுவரை ஷை நிதிக்காகச் சேர்ந்துள்ள தொகையின் விவரம் கீழே தந்துள்ளேன். இதில் * குறியிட்டுள்ள தொகைகள், என்னிடம் சேர்ப்பிக்கப்பட்டுவிட்டவை, பிற இனி சேர்ப்பிக்கப் படவேண்டியவை.

தோழர்கள் விரைவாகப் பணத்தை அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

| | ரூ. | அ. |
|---|---|---|
| பெரியார் ஈ. வெ. இராமசாமி, ஈரோடு. | 150 | 0 |
| டாக்டர் ஷ. கிருஷ்ணசாமி, M.A.P.H.D Bar-at-Law. | 150 | 0* |
| சர் ஆ. கே. சண்முகம், M.A.K.C.I.E. | 100 | 0 |
| திரு. என். கிருஷ்ணராஜு, மிராசுதார், நாமக்கல். | 101 | 0 |
| ,, ஆ. ஜெகந்நாதன், பொற்றுபட்டி | 105 | 0 |
| ,, எம். ஆர். மந்திரன், திண்டுக்கல். | 101 | 0 |
| ,, லட்சுமிரதன்பாரதி மூலம் மலேயாத் தோழர்கள் | 210 | 0* |
| ,, ஜி. இலட்சுமணன், கல்வார்பட்டி. | 101 | 0 |
| ,, எஸ். வேதரத்தினம்,பி.எ. சென்னை. | 100 | 0* |
| ,, எஸ். சண்முகம், கோட்டாறு,நாகர்கோயில் | 100 | 0 |
| ,, சி. விசாலாட்சியம்மாள், பொற்றுபட்டி. | 50 | 0 |
| ,, மு. செல்லப்ப ரெட்டியார், நாமக்கல். | 51 | 0 |
| தோழர் டி.பி.எஸ். பொன்னப்பா மூலம், போர்முனைத் தோழர்கள் | 50 | 0* |
| ,, என். பொன்னுசாமி ரெட்டியார், போடிநாய்க்கன்பட்டி. | 51 | 0 |
| ,, கே. கருப்பண்ணன், மிராசுதார், நாமக்கல். | 51 | 0 |
| ,, டி. கே முத்துசாமி, துத்திகுளம். | 51 | 0 |
| ,, லெட்சுமணன்செட்டியார், கிருஷ்ணு பிக்சர்ஸ் சென்னை | 50 | 0 |
| ,, எம். எஸ். சுவாமிநாதன், கார்த்திகேயா பிக்சர்ஸ், கோவை. | 51 | 0 |
| 'கல்கி' ஆசிரியர் | 50 | 0* |
| ,, P. B. K. தியாகராஜ ரெட்டியார், ஜமீந்தார், முத்தகப்பட்டி. | 50 | 0 |
| ,, வி. பெரியாக் கவுண்டர், நாமக்கல். | 50 | 0 |
| ,, ஆ. ஐயாசாமி, பொற்றுபட்டி. | 40 | 0 |
| ,, என். இராமசாமி ரெட்டியார், காதப்பள்ளி | 25 | 0 |
| ,, கே. காளியண்ணகவுண்டர், கருப்பட்டிபாளையம் | 25 | 0 |
| ,, என். கிருஷ்ணசாமி, மகாதேவி | 25 | 0 |
| ,, டி. என். இராமன், மானேஜர், 'லிபரேட்டர்' | 25 | 0 |
| திரு. ஆர். எம். இராமநாதன், நியூட்டோன் ஸ்டுடியோஸ் | 25 | 0 |
| ,, வி. தி. பொன்னுசாமி, சேலம்பாக்கம் | 25 | 0 |
| ,, நா. அண்ணமலை, தமிழ்ப்பண்ணை, சென்னை. | 25 | 0 |
| ,, எ. எஸ். துரைசாமி, வியாபாரம், ஜி.டி.சென்னை | 25 | 0* |
| திரு. வி. நமசிவாயம், பாரத்ஸ்டுடியோ, சென்னை | 25 | 0 |
| ,, எஸ். முத்தையாமுதலியார் B.A.B.L. மயிலாப்பூர் | 25 | 0 |
| ,, பி. கே. மாரப்ப கவுண்டர். நல்லிபாளையம் | 20 | 0 |
| ,, கே. வி. ராஜுரெட்டியார், நல்லிபாளையம். | 20 | 0 |
| ,, பி. பெத்து ரெட்டியார், நல்லிபாளையம். | 15 | 0 |
| ,, சரவணபவா பிக்சர்ஸ், சென்னை. | 11 | 0 |
| ,, கா. அப்பாதுரைப்பிள்ளை, M.A.L.T. சென்னை. | 21 | 0 |
| ,, ரா. ஆத்மநாதன், தஞ்சை. | 18 | 0 |
| அரிசிப்பங்கீடு அலுவலர், தென்வட்டம். கும்பகோணம். | 10 | 0 |
| இராவ்சாகெப் வெ. வி. சுப்ரமணிய முதலியார், வெள்ளகால் | 10 | 0 |
| ,, ஆர். சுப்பையா நாயுடு, பாக்யா பிக்சர்ஸ், சென்னை | 10 | 0 |
| ,, Mr. டின்ஷா, நியூட்டோன் ஸ்டுடியோஸ், சென்னை. | 10 | 0 |
| ,, எம். வி. மணி, சினிமா நடிகர், சென்னை. | 10 | 0 |
| ,, வி. மாரியப்ப கவுண்டர், போடிநாய்க்கன்பட்டி | 10 | 0 |
| ,, மணியம் அரவாண்டிக் கவுண்டர், போடிநாய்க்கன் பட்டி. | 10 | 0 |
| ,, என். வீரமரெட்டியார், காதப்பள்ளி. | 10 | 0 |
| ,, என். முத்துசாமி.நாமக்கல். | 10 | 0 |
| ,, எம். கிருஷ்ணசாமி ரெட்டியார். நல்லிபாளையம் | 10 | 0 |
| ,, பி. பொன்னுசாமி ரெட்டியார். நல்லிபாளையம். | 10 | 0 |
| ,, ஆர். இராஜு ரெட்டியார், நல்லிபாளையம் | 10 | 0 |
| ,, வி. வேணுகோபால ரெட்டியார், நல்லிபாளையம். | 10 | 0 |
| ,, வி. இராமசாமி ரெட்டியார், நல்லிபாளையம் | 10 | 0 |
| ,, கே. பி. வேலாயுதம், நாமக்கல். | 10 | 0 |
| ,, எஸ். ஆர். சிதம்பர ரெட்டியார், சிலுவம்பட்டி. | 10 | 0 |
| ,, கே. பழனியாண்டி, கருப்பட்டிபாளையம். | 10 | 0 |
| ,, என். நல்லப்ப ரெட்டியார், காதப்பள்ளி. | 10 | 0 |
| ,, கா, பொ. முத்துசாமி, காஞ்சிகோயில். | 10 | 0 |
| ,, அ வைத்திலிங்கம், பொற்றுபட்டி. | 10 | 0 |
| ,, எம். வெங்கிட்ராம ரெட்டி, புதுப்பட்டி. | 10 | 0 |
| ,, திராவிடர் கழகத்தினர், பிச்சாண்டர் கோயில். | 5 | 8 |
| சி. என். எ. மூலம் 38-எ. வசூல் புத்தகவாயிலாக | 61 | 0* |
| திருவாரூர், இந்திராணி சி. என். எ. மூலம் | 6 | 5* |
| திரு. எஸ். வெங்கட்டராமன், கோவை. | 2 | 0 |
| ,, எ. குப்புச்சாமி, சென்னை. | 1 | 0* |
| ,, பி. எஸ். கே. ஜெயபால், நாசரத் | 2 | 1* |
| கிண்டி என்ஜினியரிங் கல்லூரி சர்வே மாணவர்கள் | 27 | 6* |
| திரு. பி. பொன்னுசாமி,சேலம் | 3 | 0* |
| ,, தியாகதுர்க்கம்தோழர் | 1 | 0* |
| 'திராவிடநாடு' மூலம், போர்முனைத் தோழர்கள் | 17 | 0* |
| ஆக கூ ... | 2504 | 4 |

மேற்படி பட்டியலில் அடங்கியுள்ள தொகையில் இந்த * அடையாளமுள்ள தொகையும், தோழர் ப. கண்ணன் அவர்களால் தோழர் டி. என். இராமன் அவர்களிடம் கொடுக்கப்பட்ட ரூபா 200–0–0ம் என்னிடம் சேர்ப்பிக்கப்பட்டிருக்கிறது.

**சி. என். அண்ணாத்துரை,**
பொருளாளர்,
பாரதிதாசன் நிதிக் கமிட்டி,
"திராவிடநாடு" நிலையம், காஞ்சிபுரம்.


ஜெயராம்காயசுத்திலேகியத்தைச் சாப்பிடுங்கள்
தலைவலி, மயக்கம், வாந்தி, நெஞ்சுவலி,
வயிற்றுவலி, புளித்தேப்பம், வயிற்றுப்பிசம்,
குடல்வாதம், இடுப்புவலி, மூலநோய்,
இவைகளைப்போக்கி மலத்தைச்சுத்தமாய்ப்பிரிக்கும்
அற்புத சஞ்சீவி
ஜெயராம் காயசுத்தி லேகியம்
1-சேர் ரூ. 4. ½-சேர் ரூ. 2–2–0.
வி. பி. பி. வேறு.
ஜெயராம் வைத்தியசாலை,
28, காசிவிஸ்வநாதர் மேல்வீதி, கும்பகோணம்.

## பேச்சு மேடை

2-ம் பக்கத் தொடர்ச்சி

வது; இல்லை என்றால் இல்லை என்று கூறுவது சுலபந்தானே இதுவென்று கணக்குப்படிப்பினர் கூறக்கூடும், அதிலே இருக்கும் சிரமம் அவர்களுக்குத் தெரிவதில்லை.

★

மகாகனம்சீனுவாசசாஸ்திரியார் மாண்டேடட் பிரச்னைபற்றியும் பேசுகிறார், மந்தரை சூழ்ச்சிபற்றியும் உபன்யாசம் செய்கிறார். திரு. வி. கலியாணசுந்தரனாரோ, இளையான்குடிமாறநாயனார் புராணத்தைப்பேசுகையிலேயே லெனின் கண்ட மார்க்கத்தை நாயனார்நெறியிலே நுழைத்துக்காட்டுகிறார். விமானம் ஏறிப்பறக்கிறார் வேதாந்திசர். இராதாகிருஷ்ணன், அவரே பிறகு விஜயதசமி பண்டிகை விசேஷத்தையும் பேசுகிறார், "எனக்குக் கோயில் கட்டுவது பைத்யக்காரச் செயல்" என்றுகண்டிக்கிறார் காந்தியார், ஆனால் அவரே, ராமநாம உச்சரிப்பே நோய் தீர்க்கும் மருந்தாகுமென்கிறார், செங்கொடியே நம்கொடி என்கிறார் கம்யூனிஸ்டு, பக்கத்திலுள்ள மூவர்ணக்கொடிக்கும் பணிவதே நமதுகடன் என்றும் பாடுகிறார், இப்படி முரண்பாடுமயமாக இருக்கிறதே, சொல், செயல், காட்சி, கருத்து, எதை எடுத்தாலும். என்ன செய்வது?

★

முற்போக்கான, முற்போக்குத் தரக்கூடிய விஷயங்கள் அதிகமாகப்பேசப்பட்டு, பழைமை அதிகமாகப் பேசப்படாமலிருக்குமானால், நமது நாட்டுப் பிரசங்கிகள், ஆசிரியர்கள், நடிகர்கள், கவிகள், ஓவியக்காரர், ஆகியோர் முற்போக்கான விஷயங்களை முன்னிலையில் கொண்டுவருவதற்கு மட்டுமே தமது திறமையை உபயோகப்படுத்துவது என்று தீர்மானித்துவிட்டால், இந்தச்சிக்கல் தீர்ந்துவிடும், முன்னேற்றப் பாதையிலேபோக நாட்டுமக்கள் விரும்புகிறார்களா, அல்லது பழைமையிலேயேமூழ்கிக் கிடக்கவேண்டுமென்று அசைக்க முடியாத தீர்மானத்தில் உள்ளனரா என்ற உண்மை தெரிந்துவிடும். ஆனால் இங்குநம்நாட்டு அறிவு பரப்புவோரின்போக்கு, விசித்திரமாகவன்றோ இருக்கிறது.

சீனக்காரர் ஒருவர் அமெரிக்கா சென்றார். அங்கு விருந்து, வைபவம், கேளிக்கை, எல்லாம் கண்டார். அமெரிக்கர்கள் விசித்திர மானபேர்வழிகள் என்று அவருக்குத் தோன்றிற்று, அந்தச்சீனர், "வேடிக்கைக்காரர்களய்யா நீங்கள், கண்ணாடிக்கோப்பையிலேசர்க்கரைபோடுகிறீர்கள், பானம்இனிப்பாகஇருக்கவேண்டுமென்று, அதனுடனேயே எலுமிச்சம்சாறுபிழிகிறீர்கள்புளிப்புத்தேவைஎன்றுகூறி, சுறுசுறுப்புத்தரும்என்று குடிபிறக்க ஜின் (சாராயவகை) ஊற்றுகிறீர்கள் கோப்பையில், அதிலேயேகுளிர்ச்சிவேண்டுமென்று ஐஸ் போட்டுக்கொள்கிறீர்கள், எதிரே இருப்பவரிடம்பானக்கோப்பையைக்காட்டி "உனக்காக இதோ" என்று கூறுகிறீர்கள், பிறகு, பானத்தை நீங்களே குடித்துவிடுகிறீர்கள். மகா விசித்திரப் பேர்வழிகளப்பா இந்த அமெரிக்கர்கள்!" என்று சொன்னாராம். அந்தச்சீனரின் ஆச்சரியத்துக்கு அளவேஇராது, இங்குநமது நாட்டு அறிஞர்குழாம் தயாரித்துத் தரும் பானவகையின் தன்மையைக் கண்டால். அவர்கள் முற்போக்குத்துறைக்கு வேலை செய்கிறார்களா? பழைமைக்குப்பாடு படுகிறார்களா? என்பதை மக்கள்புரிந்து கொள்ளக்கூடாது என்ற நோக்கம் கொண்டவர்கள்போலவே நடந்து கொள்வதைக் காணலாம். எடுத்துக்காட்டாக, ஏதாவது ஒரு பத்திரிகையின் சனிமலர், ஞாயிறு இதழ், எடுத்துப்பாருங்கள். ஒரு பக்கத்திலே, லூயிபிஷரின் கட்டுரை, அணுகுண்டு ஆராய்ச்சி,இருக்கும். இன்னொரு பக்கத்திலே, இலுப்பையூர் பற்றிய ஸ்தலபுராணமும் இருக்கும். தலையங்கம், விஞ்ஞானம் விவேகமல்ல என்ற பொருள்பற்றி இருக்கும், நிருபசாரம், ஊரிலேபல இடங்களில் நடைபெற்ற கும்பாபிஷேகச் செய்திகளாக இருக்கும். மக்களின் மனதிலே புதுக்கருத்து எழவேண்டியதன் அவசியத்தைப் பற்றிய சொற்பொழிவு ஒருபுறம் பிரசுரமாகி இருக்கும், மற்றோர் பக்கத்தில் மகாமகத்தின் பெருமை பற்றி மாங்காட்டுச் சாஸ்திரியார் கூறிய உபன்யாசம் வெளி வந்திருக்கும். நாடகமேடையில் முன்னொளிலே பபூன் வேடக்காரன் உடைபோல, ஏடுகள் காட்சிதருகின்றன என்று கூறினால், அந்த ஏடு வெளியிடுபவர் கோபிப்பர், ஆனால் என்னசெய்வது? என்னால்சொல்லாமலிருக்க முடியவில்லை. ஒருசமயம் அந்தப் பத்திரிகைகள், புரட்சிஏடுகளாகத் தோன்றும், மறுசமயம் வெறும் பஞ்சாங்கமாகிவிடக்காண்கிறேன். வேறு வேறு சமயங்களிலேமட்டுமல்லவே! ஒரேசமயத்திலே,வேறுவேறு பக்கங்களிலே வேறுவேறுபத்திகளிலேகூட இந்த விசித்திர மாறுபாடுகளே உள்ளன. எப்படி,நாடுமுன்னேற்றப்பாதைக்குப் போவதா, பழைமையிலேயே இருப்பதா என்று தீர்மானிக்க முடியும். நாடுதிகைத்துக் கிடக்கிறது. வெளி உலகு நகைத்துக்கொண்டு முன்னேறுகிறது.

மார்ச்சு 24ந்தேதி 'இந்து' பத்திரிகை இதழிலே, அன்றுகாமிகழ்ச்

(3-ம் பக்கம் பார்க்க)

### மணமகள் தேவை

சாதி, மதங்கருதாத மணமகள் தேவை. வயது 20க்குள்ளிருக்க வேண்டும். குறைந்தது8வதுவகுப்புக்கல்வியறிவுள்ளவர்கீழ்க்காணும் முகவரிக்கு 24–4–46வரை எழுதினால் தெரிந்து கொள்ளலாம். மணமகனுக்குவயது 26.

K. S. Krishnasamy, Clerk.
38, Gurkha Rifles
C/o 3. Q. A. O G. R. C.
Dehra-Dun (U. P.)

# புராணத்திற் புதுமை காணுவோரே!

—(ஈழத்தடிகள்)—

திருஞான சம்பந்தர் காலத்தில், நின்றசீர்நெடுமாறன் என்பான் பாண்டிநாட்டை அரசாண்டு வந்தான். அந்நாளில் சமணம் பெருகிச் சைவம் அருகிற்று. பாண்டியனும் குடிகளும் சமண மதத்தைத் தழுவினர்கள். பாண்டியனுடைய மனைவி மங்கையர்க்கரசியும், அவனது அமைச்சர் குலச்சிறையும் மட்டும், பாண்டி நாடு புரிந்த பெருந்தவத்தால், சைவச் செந்நெறி நின்று ஒழுகினர். இந்நிலையில், சமணமதத்தை ஒழித்துச், சைவசமயத்தை ·மதுரையில் நிலைநாட்ட எண்ணிய குலச்சிறையும் மங்கையர்க்கரசியும், திருஞானசம்பந்தர், திருமறைக்காட்டில் இருப்பதைக்கேள்வியுற்றுத், தங்களின் நோக்கத்தை விளக்கிக் கூறும்படி சில ஒற்றர்களைத் திருமறைக்காட்டில் இருக்கும் சம்பந்தரிடம் அனுப்பிவைத்தார்கள். ஒற்றர்கள் மதுரையம்பதியின் நிலைமையை விளக்கிக் கூறியதும், உடனிருந்த அடியவர் குழாங்கள் சம்பந்தரை நோக்கி, "அடிகள் பாண்டி நாட்டுக்கு இப்பொழுதே எழுந்தருளல் வேண்டும்; சமணர்களை வென்று சைவத்தின் உண்மையை நிலைநாட்டல் வேண்டும்; அரசனையும் திருநீற்று நெறியில் நிறுத்தி ஆளுதல் வேண்டும்" என்றுவேண்டிக்கொண்டார்கள். சம்பந்தரும் அவ்வேண்டுதலுக்கு உடன் பட்டார். பின்னர், தம்முடன் இருந்த திருநாவுக்கரசரிடமும், மதுரையிலிருந்து வந்த ஒற்றர்கள் கூறியதை விளக்கித், தான்மதுரைக்குப்போக முடிவு செய்திருப்பதையும் தெரிவித்தார். இதனைக்கேட்ட அப்பர், சம்பந்தரை நோக்கி, "பிள்ளையாரே, பொறும்! சமணர்கள்போல்லாதவர்கள்; அவர்கள் வஞ்சனைகளை அளவின்றிச் செய்யக் கூடியவர்கள்; கோள்நிலையும் நன்றாய் இல்லை; ஆகையால், இப்போது பாண்டி நாட்டிற்குப் போதல் தகாது" என்று தடுத்தார். அதற்குப் பிள்ளையார் (சம்பந்தர்) "நாம் போற்றுவது சிவபிரான் திருவடி; நாள்—கோள் நம்மை என்செய்யும்" என்று கூறி, "வேயுறுதோளி பங்கன்" என்ற தேவாரத்தையும் பாடினர். அதற்குமேல் அப்பர் தடையொன்றும் கூறாது, சம்பந்தருக்கு முன்னே தாம் மதுரைக்குப் புறப்படத் துணிந்தார். சம்பந்தர், அப்பரைத் தடுத்து, "நீர் இங்கேயே இரும்; நான் போய்ச் சமணர்களை வென்று வருகிறேன்" என்று கூறி மதுரைக்குப் புறப்பட்டார். இது, பெரியபுராணத்தில், சம்பந்தர் வரலாற்றில் காணப்படும் நிகழ்ச்சிகளில் ஒன்று.

எனவே, இந்நிகழ்ச்சியில், மதுரைக்குப் போகவேண்டு மென்ற அப்பரின் விருப்பத்தைச் சம்பந்தர் ஏற்றுக் கொள்ளாததன் காரணம் என்னவென்பது தெரியவில்லை. புராணம் பாடிய சேக்கிழாரும் இதுபற்றிய குறிப்பு எதுவும்கூறவுமில்லை. அப்பரும் சம்பந்தரும் ஒன்று சேர்ந்தே பல ஊர்களுக்குப் போயிருக்கும் செய்தி புராணத்தில் கூறப் பட்டிருக்கிறது. திருவீழிமிழலையில், பஞ்சப்போக்கப் படிக்காசு பெற்றபொழுதும், மறைக்காட்டுக் கதவு திறக்கவும் அடைக்கவும் பாடிய பொழுதும் இருவரும் ஒன்றாகவே இருந்திருக்கிறார்கள். இன்னும் வேறு பற்பல ஊர்களுக்கும் இருவரும் ஒருங்கு சென்றே சைவத்தின் உண்மையை நிலைநாட்டினர்கள் என்று புராணத்திலேயே சொல்லப்பட்டிருக்கிறது. ஆனல், மதுரைக்கு மட்டும், அப்பர் தம்முடன் வருவதைச் சம்பந்தர் விரும்பாததன் காரணம் என்ன! சம்பந்தர் மதுரைக்குப் போகப் புறப்பட்டதன் நோக்கம், அங்குள்ள சமணர்களை வென்று சைவத்தை நிலை நாட்டுவதற்கே என்று சொல்லப்பட்டுள்ளது. அப்படியிருந்தும், அப்பர் தம்முடன் வரச் சம்பந்தர் இசையவில்லை. சம்பந்தரைப் பார்க்கிலும் அப்பருக்கே சமணர்களைப் பற்றியும், சமண மதத்தைப் பற்றியுமுள்ள உண்மைகள் நன்கு தெரியும். அப்பர், ஒரு காலத்தில் சமணமதத்திற்கே தலைவராக இருந்து, பின், அவர்களுடைய கொடுமைகள் பலவற்றுக்கு ஆளாகி, அவற்றில் எல்லாம்வெற்றிபெற்றுச் சமணத்தை வெறுத்துச் சைவத்தைத் தழுவியதாகச் சொல்லப்பட்டுள்ளது. ஆகையால், சமணர்களோடு நெருங்கிப் பழகி அவர்களுடைய உட்கருத்துக்களை நன் குணர்ந்த ஒருவரின் துணை, சமணர்களோடு நெருங்கிய தொடர்பில்லாத ஒருவர், அவர்களை வெல்லப் போகும் போது தமக்குப் பெரிதும் உதவியாய் இருக்கும் என்று எண்ணுவதும், அப்படிப்பட்ட ஒருவர் கிடைத்தால், அவரைப் பெரிதும் வரவேற்று, "இது நமக்கு எதிர்பாராது கிடைத்த உதவி; விருப்பு வெறுப்பற்ற எம் இறைவன்குறிப்பறிந்து செய்த உதவி" என்றுஉளமகிழ்ச்சியால் இறும்பூதெய்தி அவரையும் உடன் அழைத்துச் சென்று, ஒருவருக்கு இருவராக நின்று சமணர்களை வெல்லுவதே இயற்கையும்—முறையும் — அறிவுடைமையுமாகும். ஆனல், சம்பந்தர் அங்ஙனம் செய்யவில்லை. காரணம் என்ன?

சம்பந்தரும் அப்பரும் ஒருங்கிருந்த காலத்தில், நடைபெற்ற நிகழ்ச்சிகளில், அதாவது, கடவுளின் திருவருளால் நிகழ்ந்த அர்புதங்கள் என்று சொல்லப்பட்டவைகளில், அப்பரைப் பார்க்கிலும் சம்பந்தர் அதிகமாகவோ அல்லது அப்பரால் செய்ய முடியாததைச் சம்பந்தர் செய்ததாகவோ சொல்லுவதற்கு எதுவும் இல்லை. அதுவுமன்றி, அப்பர்செய்ததற்கு இரண்டாவதாகவே சம்பந்தரின் செயலைக் குறிப்பிடவேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது. அதாவது, திருவீழிமிழலையில் அப்பர் பெற்ற படிக்காசுக்கு அவ்வூரவர்கள் வட்டம் கேட்கவில்லை; சம்பந்தர்பெற்ற படிக்காசை மாற்றிக்கொடுப்பதற்கு வட்டம் கேட்டார்கள். அப்பவே சம்பந்தரின் தன்முனைப்பில் (கெர்வத்தில்) பாதி குறைந்துவிட்டது. இரண்டாவதாக, மறைக்காட்டுக்கதவைஅப்பர் திறந்தபோது எஞ்சியிருந்த தன்முனைப்பும் போய்விட்டது. போகவே, சம்பந்தருக்கும், அவர் இனத்தவர்க்கு இது போன்ற நிகழ்ச்சிகளால் இயற்கையாக உண்டாகும் பொறாமை குடிகொண்டு விட்டது, ஒருதமிழன்—சூத்திரன், பிரம்ம குலத்தவரான பார்ப்பனருக்கு ஏவல் செய்து கிடப்பதைவிட்டுப், பார்ப்பனர்க்கென்று தனியாக ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள காரியங்களைச் செய்வதா—செய்யவிடுவதாஎன்றபொறாமையே சம்பந்தரை இங்ஙனம் செய்யும்படி தூண்டிற்று. இந்தப்பொறாமை திருவீழிமிழலையில் படிக்காசுபெற்றபொழுது முளைத்துவளர்ந்து, மறைக்காட்டுக்கதவடைப்புத் திறப்பில் முழுவடிவத்தை அடைந்து 'தன் வேலை'யைச்செய்யத்தொடங்கிவிட்டது. பார்ப்பனஞகிய சம்பந்தர் பக்கத்தில் இருக்கும் போது தமிழனுகிய அப்பர் கதவைத் திறக்க முடன்றது மன்னிக்கமுடியாத மாபெரும் குற்றம் என்பதைச் சேக்கிழார் நன்கு எடுத்துக்காட்டி விளக்கியுள்ளார். எனவேதான், மதுரைக்குப்போகும் போது அப்பரைத்தம்முடன் அழைத்துச் செல்லச் சம்பந்தர் உடன்படவில்லை. இது முதற்காரணம். சம்பந்தர், அப்பரைத்தம்முடன் அழைத்துச் செல்லாததற்கு இன்னொரு காரணமும் உண்டு.

அதாவது, முதலில், அப்பர் சைவசமயத்தைத்தழுவியே இருந்தார். பின்னர் சைவசமயக் கொள்கைகள் அவருக்குப் பிடிக்காததால், சமணசமயமே சிறந்ததென்ற முடிவோடு அதனைத்தழுவி அதன் தலைவராகச் சிலகாலம் இருந்தார். அதன் பின்னர் மீண்டும் எப்படியோ சைவசமயத்தையே தழுவலானர். (அப்பரின்சமய மாறுபாடுகளையும் அவற்றிற்குரிய காரணங்களையும் அப்பர் வரலாற்றை ஆராயும்போது விளக்கமாக எழுதுவோம்) மீண்டும் சைவசமயத்தைத் தழுவியிருந்த அப்பர், சைவசமயத்தின் பேரால் பார்ப்பனர் தங்கள் உயர்வு ஒன்றையே குறிக்கோளாகக்கொண்டு பார்ப்பனரல்லாதாருக்குச்செய்யும் கொடுமைகளை நேரடியாகத்தாமே அனுபவித்து மனம் நொந்திருந்தார். திருவீழிமிழலைமறைக்காடுஆகிய ஊர்களில் ஏற்பட்ட நிகழ்ச்சிகளால் அப்பரின் மனம் புண்பட்டுள்ளது என்பது அவருடன் இருந்தசம்பந்தருக்கும்தெரிந்திருக்கும். எனவேதான், அப்பரைத்தம்முடன் அழைத்துச் செல்லச் சம்பந்தர் உடன்படவில்லை. "இவன் முன்னரே சமணனய் இருந்தவன்; சமணசமயக் கொள்கைகளை நன்குணர்ந்தவன்; இப்பவோ சைவசமயததில் அருவருப்பும், சைவசமயத்தை நிலைநாட்டவந்த என் பேரில் வெறுப்பும் கொண்டு மனம் புண்பட்டிருக்கிறன்; இந்த நிலையில் இவனை நம்முடன் அழைத்துச் சென்றல், மதுரையில் உள்ள சமணர்களோடு இவனும் சேர்ந்து, என்னுடைய சூழ்ச்சிகளை அவர்களுக்குச் சொல்லி, நான்மேற்கொண்ட சைவப்பணிக்கு எப்படியும் இடையூறு உண்டாக்கி மதுரையில் சமண சமயமே நிலைக்கும்படி செய்துவிடுவான்; ஆகையால் இவனை நம்முடன்அழைத்துச்செல்வதோ, அல்லது இவனை மட்டும்தனியாக மதுரைக்கு அனுப்புவதோ அடாதகாரியம்; நாமே நம்தலைமீது மண்ணைப்போட்டுக்கொள்வது போலாகும்" என்று சம்பந்தர் கருதியதாலேயே, அப்பர் செல்லவிரும்பியதற்குஇணங்கமறுத்துவிட்டார். அப்பரை மதுரைக்குப் போகவிடாமல் தடுத்ததற்கு நான்மேலே கூறியஇரண்டு காரணங்களைத் தவிர, வேறு எதுவும் இருக்கமுடியாதென்பதைப் பெரியபுராணத்தை நடுநின்ற ஆராய்பவர் எவரும் ஒப்புக்கொண்டேயாகவேண்டும். இன்னும் ஐயப்படுவோருக்குப் பின்னும் ஒரு காரணம் கூறுகின்றேன், பார்ப்பனரல்லாத சைவமெய்யன்பர்களின்மனம்குளிர்வதற்காக. அதாவது, அப்பர், சமண நூல்களையும், சைவசமய நூல்களையும் நன்கு கற்றவர். மதுரைக்குப்போய் அங்குள்ள சமணர்களோடு நடத்தும் உரையாடலில் (வாதத்தில்) சமணர்களைத் தோற்கடிக்கும் முறையில் தம்முடைய அறிவாற்றலைப் பயன்படுத்தி, ஒருக்கால் அவரே வெற்றி பெற்றுர் என்று ஏற்பட்டுவிட்டால், தமக்கு வரவேண்டிய புகழ் அப்பரையன்றே சார்ந்துவிடும் என்று சம்பந்தர் கருதி அப்பரைமதுரை செல்லவிடாது தடுத்திருக்கலாம். ஆனல, பெரியபுராண நிகழ்ச்சிகளை ஒழுங்காகவும் முறையாகவும் நேர்மையாகவும் ஆராய்ந்து படிப்பவர்களுக்கு இக்காரணம்அத்துணைப் பொருத்தமாகத் தோன்றுது. என்றுலும், ஒருக்கால், என் இப்படி இருக்கக்கூடாது? என்று எவரேனும் பதட்டப்பட்டுக் கேட்டால், அவர்களுடைய உள்ளமும் சிறிது குளிரட்டும் என்று கருதியே, உண்மைக்காரணங்கள் இரண்டுடன் ஒரு ஒட்டுக்காரணத்தையும் கூறினேன்.

அப்பர் சம்பந்தர் ஆகிய சமயாசிரியர்களின் காலம், சமயச்சூழல்களில் அகப்படாது, மக்கள், இயற்கையோடு இசைந்த பகுத்தறிவின் துணைகொண்டு வாழக்கூடியசிறந்த முறையைக் கடைப்பிடித்துள்ள இக்காலம் போலன்றி, யாதாயினும் ஓர் சமயத்தைத்தழுவிவாழ்தலையே சிறந்த முறையெனக்கொண்டிருந்தகாலமாதலால், அப்பரும், சைவசமயம், மக்களின்வாழ்வுக்கு ஏற்ற வழிகாட்டியல்லவென்று கருதியபோது, அதனைவிட்டுச் சமண சமயத்தைச் சார்ந்தும், பின்னர் சமணமும் தவறுடைத்தென்றுஎண்ணியபோது மீண்டும் சைவ சமயத்தையே தழுவும்படியான நிலையில் இருந்து பெரிதும் அல்லற்பட்டதாகவே தெரிகிறது இதனுலேயே, கோத்திரம் குலம்—சாத்திரம் சமயம் ஆகிய அறிவுக்கோவ்வாக் கோட்பாடுகளைத் தாம்பாடியதேவாரப் பதிகங்களின் வாயிலாகப் பெரிதும் கண்டித்துள்ளார். சாத்திரம் சமயம்—கோத்திரம் குலம் ஆகியவைகளைப் பாராட்டுபவர்களைக் கண்டித்ததோடல்லாமல், அத்தகையினரைச் "ஈழக்கர்" என்றும் குறிப்பிட்டுப் பாடியுள்ளார். இவை எல்லாம், கோத்திரம் குலம் ஆகியவைகளை முன்னிறுத்திச், சமயநெறியை வளர்த்து அதனுல் தங்கள் உயர்வுக்கும் சுகவாழ்வுக்கும் வழிதேடிக்கொண்டவர்களால் தாம்பட்ட துன்பங்களையும்கொடுமைகளையும் தாங்கமுடியாத நிலையில் மனம் நொந்து—வேறு போக்கிடமின்றி நின்று கூறியவைகளாகும். அப்பரைப் போலவே சமயப்படுகுழியினின்றும்மீள முடியாத நிலையிலிருந்து அல்லற்பட்டவர்களான சிவவாக்கியர், திருமூலர், பட்டினத்தார், தாயுமானவர், இராமலிங்கர்போன்ற தமிழ்ப்பெரியார்கள் எல்லாரும், நட்டகல்லைத்தெய்வம் எனக்கூறுதேஎன்றும், அன்பேயன்றிவேறென்று தனியாகக் கடவுள்என்றபெயரோடில்லையென்றும், கல்லிலும் செம்பிலிலும் கடவுள் இருப்பான் என்று கூறும் கயவருரையைக் கண்டித்தும், அறிவையன்றி மற்றெதனையும் கடவுள் என்று அழைக்கப்படாதென்றும், கண்மூடி வழக்கமெல்லாம் மண்மூடிப்போகவேண்டுமென்றும் கூறியிருப்பவைகளை ஆழ்ந்து நோக்கும் போது, பார்ப்பனியமும் அதன் வளர்ப்புத்தாயான மதமும் அந்தக்காலத்தில் எந்த அளவுக்கு வேலைசெய்து பார்ப்பனரல்லாதாரை அடக்கி அடிமைகொண்டு வைத்திருந்ததென்பது நன்கு புலனுகின்றது. ஆனல் இங்குபேசப்படும்அப்பரின் நிலை, அடக்கி அடிமைப்படுத்தியதோடு நின்றுவிடவில்லை; அடிமைப்பட்ட ஒருவன் அடிமைப்படுத்தியவனுக்கு எப்படி ஏவல் புரியவேண்டுமென்பதையும் எடுத்துக்காட்டிவிட்டது.

சம்பந்தரைப்போலவே அப்பரும், ஒரு சமயாசிரியராய் இருந்தபோதிலும், அவர் ஒரு தமிழன்—சூத்திரன் என்ற காரணத்தால், அவருக்குஇடப்பட்டபணி, சம்பந்தரின் பல்லக்கைச் சமப்பதும், கோயில் வீதிகளிலுள்ள புல்பூண்டுகளைச்செதுக்குவதுமாகும். அப்பர், சம்பந்தரின்பல்லக்கைச்சுமந்து செல்லும்நேரம்போக, எஞ்சியுள்ளநேரங்களில் உழவாரப்பணி செய்ய வேண்டியது. அப்பர், அவர் எவ்வளவு பெரியவராய் இருந்தபோதிலும், பார்ப்பனச்சிறுவனுன சம்பந்தரின்பல்லக்கைச் சுமந்துதிரிந்தான் என்பதை நாடறியச் செய்யவேண்டுமென்று கருதியசம்பந்தர், ஒருநாள், "அப்பர் எங்குற்றர்" என்று கேட்டதுபோலவும், 'அதற்கு, அப்பர், "தேவரீர் திருவடிதாங்கும்பேறுபெற்று இங்குற்றேன்" என்று கூறியதுபோலவும் உள்ள ஒரு நிகழ்ச்சி தமிழ்மக்களின் உயர்வுக்கும் நலனுக்குமாக ஒரு தமிழனலேயே பாடப்பட்டதாகச் சொல்லப்படும் பெரிய புராணத்தில் காணப்படுகின்றது.

எனவே, இத்தகைய நிகழ்ச்சிகள், தமிழ் மக்களை உயர்வுபடுத்தக் கூறப்பட்டவையா? அன்றித் தாழ்வுபடுத்தக்கூறப்பட்டவையா என்பதனை, இனிமேலாவது, புராணங்களில் புதுமை கண்டு புளகாங்கிதம் அடையும் புலவர்பெருமக்கள் எண்ணிப்பார்க்கவேண்டுகிறேன்.

தந்தி:- "புறுமார்க்" திருச்சி.




Edited Printed and Published by C. N. Annadurai M.A., at "Dravida Nadu" Press. 317—319 Hodgsonpet, Conjeeveram.